# குற்றம் கடிதல்

Kuttram Kadithal

Written & directed by

Bramma

SCENE 1. BLACK SCREEN

*முழுவதும் இருட்டு. ஏதோ நாடகக் குழு மற்றொரு நாடகத்திற்கு ஒத்திகைப் பார்த்தபடி இருக்க, பின்புலத்தில் பல சத்தங்கள் கேட்டபடி இருந்தன.*

**குரல் – 1**
ஒத்திகைப்படி இல்லன்னுபுட்ட! பாட்டிலு
கூட இல்லன்னா எப்படிண்ணா?

**வெற்றிலை கொதப்பிய மற்றொரு குரல்**
யோவ்! திட்டிற போறேன்! கரெண்ட்
இல்லன்னு சுத்துகினு கெடக்கறோம்!
வத்திபெட்டிக்குதான்னு பாரு!

**பெண்குரல்**
(பலத்த சிரிப்பு)
வாங்கிக் கட்டுனியா?

**வெற்றிலை கொதப்பிய மற்றொரு குரல்**
இத! மெழுவுத்தி இங்க கெடக்கது
பாரு! பொருத்தேன்! ஏய்! வத்திபெட்டி
எத்தியா பார்!

**குரல் – 2 (பெண் குரல்)**
தோன்னா ... (குசுகுசுனெ சிரித்துக்
கொண்டே முணுமுணுத்தல்) ஒளி
லேசாகப்பரவ, ஒரு மெழுகுவர்த்தி
பொருத்தப்பட்டு அதன் அடியிலும்
நெருப்பு வைக்கப்பட்டு,
நிற்கவைக்கப்பட ஒரு பேப்பர்
மெழுகுவர்த்தி வெளிச்சத்திற்கு
கொண்டு வரப்படுகிறது.

**வெற்றிலை கொதப்பிய மற்றொரு குரல்**
(வாயில் உள்ள வெற்றிலையைத்
துப்பிவிட்டு)
... ன்னா ஆறுமுகம், தூங்கிட்டியா?
உருட்டு! உருட்டு! எடுத்து வைச்சு
உருட்டு!

வாயைப் பிளந்து கொறட்டை விட்டுக்கிடந்த கிழவர் படக்கென்று ஒரு செண்டை போன்ற மேளவாத்தியத்தை கேரளக்கொட்டு போல வாசிக்கத் துவங்க,

தலைப்பு திரையில் வரத்துவங்குகிறது.

**கட்டியங்காரனின் குரல் (முன்பு வெற்றிலைக் கொதப்பியன்)**
செங்கோபக் கடல்காரன் கைத்தேர்ந்த
மாமுனிவன்
அகிலமெல்லாம் நடுநடுங்கும்
அரசனெல்லாற் தொடை நடுங்கும்
அவன் பேரு துர்வாசன் ...

அப்படிப்பட்டவனே ... மனசுருகி,
ஊனுருகி,

CHORUS
உயிருருகி, உணர்வுருகி, ஊனுருகி

**துர்வாசன்**
(பீடியை ரெண்டு இழுத்தபடி
...)
ஏய்!
(முக்கிமுனகி)
யம்மா ... என்னையே
கவிழ்த்தனையே... குந்திபோஜக்
குமரியளே!
(கனைத்துவிட்டு ...)
என்னையே கவிழ்த்தனையே
குந்திபோஜக் குமரியளே!

**கட்டியங்காரனின் குரல்**
தண்ணி குடிறா! ...

CHORUS
தண்ணி குடிறா!

**துர்வாசர்**
(overlap)
வேண்டாம்!

**கட்டியங்காரன்**
ஏய்! சீ!

**துர்வாசன்**
நீ தந்த உண்டிக்கும் நீ வைத்த
உப்பிற்கும் இணையாக வரம் இந்தா!
பிடி வரம் இந்தா!
பிடி வரம் இந்தா! ...

மேளங்கள் முழங்குகிறது

**குந்தி**
பொய்யா? மெய்யா? துர்வாசா? -
வரம் பொய்யா? மெய்யா?

**துர்வாசன்**
நான் தந்த வரம் உனக்கு சொற்பமா?
ஏய் ... இல்லை .... இளப்பமா?
இப்போதே மந்திரச் சொல்லை
முனங்கி, நீ எந்தத் தேவனை
வேண்டுமானாலும் நினைத்து
மனமுருகு!

**கட்டியங்காரன்**
துர்வாசர் சொன்னபடி கன்னியவள்
மன முருகி ... முனிவனவன் அருளிய
மந்திரச் சொற்களை சூரியக் கடவுளை
வேண்டிச் சொல்ல ... வந்து நின்றான்
சூரியன். கையிலென்ன?

CHORUS
கையிலென்ன?

**கட்டியங்காரன்**
குழந்தை

**CHORUS**
ஆஹா! ஓஹோ! ...

**குந்தி**
நான் கன்னியாயிற்றே! என்ன
செய்வேன் குழந்தையை!

**கட்டியங்காரன்**
இன்னும் இழுக்கணும்! சாரீரம் ஓங்கி
வரவேணாமா? ...
குழந்தையை ... (வெகுவாக
இழுக்கிறார்.)
ம்! அப்புறம்! நான் தானா?
"உன் வரம் அது! உன் பிள்ளை அது!
என்னைத் தூர விடு! என்றபடி
சூரியக்கடவுள் ஓடிச்செல்ல ...

**CHORUS**
ஓஹோ புலம்பியபடி,
அழுதபடி, செய்வதறியாது தனிமையில்
குமரி நிற்க ...

**CHORUS**
ஆஹா
யாதொன்றும் அறியா
பச்சிளங்குழந்தையை ஆறென்றும்
பாராமல் பெட்டியில் வைத்து
மிதக்கவிட்டாள் குந்திதேவி!

**குந்தி**
அன்றோடு செத்தேன்! அன்றோடு
செத்தேன்! பிணமென பூமியில்
வாழ்ந்திருந்தேன்! கழுத்து வரையில்
வந்த குற்றவுணர்ச்சியின்
வெள்ளப்பெருக்கில் நான் மூழ்கி
விட்டேன் ஏ! ஏ! கழுத்துவரையில் வந்த
குற்றவுணர்ச்சியின் வெள்ளப்
பெருக்கில் நான் மூழ்கிவிட்டேன்!

**கட்டியங்காரன்**
ஏ! நல்லா பாடுறாளே! மூனு நாளும்
வந்திரேன் ...!

**குந்தி**
(பலத்த சிரிப்பு)
ஐயோ! போப்பா! கடையை யாரு
பாக்குறது ...?

SCENE 2.

*காலை விடிகிறது. கொசு வலை முடிச்சு ஒவ்வொன்றாய் அவிழ்த்தபடி சுவரில் மாட்டப்பட்டிருக்கும் ஒரு கண்ணாடியை அடைகிறாள் மெர்லின். பின்புலத்தில் தூச்ண ஓடும் சத்தம். கொசுவலையை அவிழ்க்க அவிழ்க்க அவள் கணவனை எழுப்புகிறாள்.*

**மெர்லின்**

மிஸ்டர் மணிகண்டன்! மிஸ்டர்
மணிகண்டன்! எவ்வளவு நேரமா
எழுப்பிட்டு இருக்கேன்! This is too
much! எந்திரிங்க!

சத்தம் ஏதும் வராததால் கொசுவலையை விலக்கி உள்ளே தேட, மணிகண்டன் திடீரென்று டைனாசோர் போல பற்களையும் கண்களையும் வைத்து பயமுறுத்துகிறான்.

**மெர்லின்**
சாதாரண முகத்துக்கே பயப்படல!
இதுக்கா பயப்பட போறேன்!
எந்திரிக்கிறீங்களா இல்லையா மிஸ்டர்!

படக்கென்று இழுத்து அவளையும் அருகில் படுக்க வைக்க, மெர்லின் அலறுகிறாள், கொசுவலை சுற்றிக் கொள்கிறது.

**மணிகண்டன்**
என் குழந்தையை எப்போ
பெத்துதருவ?

**மெர்லின்**
மொதல்ல நீ பல் தேய்!

**மணிகண்டன்**
ங்க பார்! உனக்கு 3 மாசம் டைம்
தர்றேன்! இங்க ஒன்னு! இங்க ஒன்னு!
உன் வயித்துல ஒன்னு! மூணு
குழந்தை! புரியுதா?

**மெர்லின்**
ஒன்னை கண்டிஷனா உருப்படியா
வளத்தா போதும்? மூணு வைச்சு என்ன
செய்யப் போற?

**மணிகண்டன்**
ஒண்ணு மாடு மேய்க்க! இன்னென்னு
பன்னி மேய்க்க!

**மெர்லின்**
இன்னொன்னு

அவளை ரசிக்கும் படி பார்த்துக் கொண்டே,

**மணிகண்டன்**
உன்னை மேய்க்க

**மெர்லின்**
ஐயோ மணி!
(சிரிப்பு)
கல்யாணம் ஆகி first day
ஆபீஸ்க்குப் போற! Punctual ஆ
போலன்னா புது பொண்டாட்டியைத்
தான் தப்பா நினைப்பாங்க!

**மணிகண்டன்**
அவன் கிடக்கிறான் மீசை ...!

(உதட்டோடு முத்தமிட வர ...) அவனை பட்பட்டென்று அடித்து, வாயை மூடி, சட்டென்று மலர்ச்சியாய் கத்துகிறாள் மெர்லின்.

எலி சத்தம் கேட்கிறது.

**மெர்லின்**
ஏய்! சத்தம் கேக்கல ... எலி
மாட்டிக்கிச்சு ...! ...
(சிரிப்பு)
போ! போ! Main Road சாக்கடைல
போய் விட்டுட்டு வா ... போ!

(அவனைத் தள்ளி விட்டு எழுந்து விட)

**மணிகண்டன்**
ஏய்! அதெல்லாம் முடியாது ...
(கைகளை பின்னந்தலையில்
கட்டியபடி)
அந்த Bucket தண்ணியில முக்கு ...
சரியாகப் போகும்!

**மெர்லின்**
(குரல் மட்டும்)
ஷ்! பாவம் மிஸ்டர் மணிகண்டன்! Get
up! Get up! சோம்பேறித்தனம்
பாக்காதீங்க ...

மணிகண்டன் தலையனையை கொஞ்சி அணைத்தப்படி அதை ஒரு குத்து விடுகிறான். தோளை வைத்து கன்னத்தை உரசியபடி

**மணிகண்டன்**
டீச்சரம்மா! கை ரொம்ப நீளுது!
நல்லதுகில்ல

SCENE 3.

*ஒரு பெரியவரும் அவர் மனைவியும் ஒரு மெயின் ரோட்டில் walking சென்று கொண்டு இருக்கிறார்கள். மூச்சிரைக்கப் பேசிக் கொள்கிறார்கள்.*

**மனைவி**
மெர்லின் திருப்பியும் இன்னிக்கு
evening அவளோட அம்மாவை பாத்து
பேசப் போறாளாம்!

**முதியவர்**
ம்!

**மனைவி**
அவங்க அம்மா என்ன சொல்லப்
போறாளோ?

**முதியவர்**
ம்!

**மனைவி**
இன்னிக்கு தான் duty ல join பண்ற!
ரெண்டு நாள் கழிச்சு, போடின்னால
மாட்டேன்றா!

**முதியவர்**
Walk While Walk! Talk While Talk.

மனைவி எரிச்சலாக அமைதியாக நடக்க ஆரம்பிக்க, இருவரும் மூச்சிரைக்க ஓரிடத்தில் திடீரென்று ஒருத்தரைப் பார்த்து ஒருவர் நின்று கைகால்களை அசைத்துக் கொள்கிறார்கள்.

**முதியவர்**

None else can match Merlin than Manikandan. ஒரே coffee. Full ஆ Scan பண்ணிட்டேன். Good boy.

(கைகால்களை stretch செய்த படி)

actuallஆ Merlin-னோட அம்மா பெருமை படணும்!

**மனைவி**

Honey moon package book பண்ணி தரப் போறேன்னீங்க!

தோளில் கிடந்த water bottle ஐ எடுத்து கொஞ்சம் குடித்துவிட்டு,

**முதியவர்**

(மூச்சிரைக்க)

ம்! கொல்லிமலை! friendடோட resort! இன்னிக்கு அவனை Headmasters Conferenceல meet பண்ணுவேன். சொல்லிடு வேன்! ஆமா! நான் ரெண்டு நாள், conference போறேனே! எப்படி? ஸ்கூலை பிரச்சனை எதுவும் இல்லாம பத்திரமா பாத்துக்குவியா?

auto விரைதல், principal பயப்படுதல்

**மனைவி**

ஸ்கூலை நாங்க பத்திரமா பாத்துக்குவோம்! உங்களை நீங்க பத்திரமா பாத்துக்கோங்க ...!

முதியவர் மனைவியின் எரிச்சலை வாங்கி சிரித்துக் கொள்கிறார்.

SCENE 4.

*ஆட்டோ வேகமாகச் செல்ல, உள்ளே பார்த்தால் அதை ஓட்டுவது ஒரு பொடியன். பின்புலத்தில் ரேடியோவில், ரோடியோ ஜாக்கி, அவசர அவசரமாக ஏதோ அறிவித்துக் கொண்டிருக்கிறார். ஆட்டோவின் வேகத்திற்கு, அதன் பின்னால் ஒரு பெண்மணி சைக்கிளில் அவசர அவசரமாக ஆட்டோவைத் துரத்துகிறார்.*

**பெண்மணி**

உன் கைய கால உடைக்கிறேன் இரு! டேய்! Breakஅ பிடிறா!

சிறுவன் சிரித்தபடி acceleratorஐ கண்டபிடி திருக, வேகவேகமாய்ச் சென்ற வண்டி திடீரென்று பெட்ரோல் காலியாகி மோட்டார் நின்றுவிட, திருகி திருகிப் பார்த்தும் ஆட்டோ மெதுவாக நகர்ந்து ஓரமாய் நிற்க, சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு அந்த பெண்மணி ஓடி வந்து சிறுவனின் காதைத் திருகுகிறாள்.

**சிறுவன்**
அம்மா! அம்மா! Mechanic
ஏமாத்திட்டிக்குறான்மா! Clutch ஒயரு
சரியா போடலை! பழைய ஆயிலு!
மோட்டர்லயும் ...

காதைத் திருகியபடி ஆட்டோவை விட்டு இழுத்து வெளியே இழுத்தபடி நடக்க, சிறுவன் மீண்டும் தாயின் பிடியிலிருந்து விலகி ஓட ...

**சிறுவன்**
ஐயோ! காப்பாத்துங்க! காப்பாத்துங்க
... கொல்றாங்களே ....

**யாரோ**
குழந்தையை இப்படியா ரோட்டுல
போட்டு அடிக்கிறது ...

பின்புலத்தில் இருவர் பேசிக் கொண்டு செல்கின்றார்கள்.

SCENE 5.

*ஒரு பொறியிலிருந்து எலி வெளியே ஓடுகிறது. ஒரு மெயின் ரோட்டில் மணிகண்டன் பொறியோடு நிற்கிறான். பின் புலத்தில் தூரத்தில் உள்ள பெட்ரோல் பங்கில், ரோட்டை cross செய்ய ஏதோ ஒரு வயதான கிறிஸ்துவ பெண்மணி, பெட்ரோல் பங்கிற்கு வருபவர்களுக்கு துண்டு பிரசுரங்களை தந்தபடி நிற்கிறார்.*

*INTERCUT*

*வீட்டில் மெர்லின் தன்னுடைய Mobile போனில் யாருடனோ பேச முயற்சி செய்து கொண்டே, இரண்டு டப்பர்வேர் அடுக்கு ஆணிதுகளில், தயிர் சாதமும், வெண்டைக்காய் பொறியலையும், Readymade கடை ஊறுகாயையும் அடுக்குகிறாள். ஒரு Sweet Box ஐயும் எடுத்து வெளியே வைக்கிறாள். பெட்ரோல் பங்க் பெண்மணி, பெட்ரோல் போட வந்த வேறொரு கிறிஸ்துவ தம்பதியரிடம் பேசிக் கொண்டிருக்கிறார். கையில் 'விழித்தெழு' என்ற துண்டு பிரசுரம் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன.*

**பைக்கில் வந்த பெண்மணி**
ஸ்தோஸ்தரம் ஜெனி! உனக்கு
இங்கியா?

**ஜெனிபர் (வயதான பெண்மணி)**
தோ முடிஞ்சுது!

தனக்கு வந்த போனை கட் செய்கிறாள்.

**ஜெனிபர் (வயதான பெண்மணி)**
இன்னும் 150 இருக்கும். சாயுங்காலம்
வந்து பாத்துக்க வேண்டியதான்.
உங்களுக்கு ...

**பைக்கில் வந்த பெண்மணி**
பையன் கிட்ட குடுத்துவுட்டேன்.
ஆபீஸ்ல போய் குடுத்துறான்னு ...

பைக் நகர்ந்து கொண்டே செல்ல ... ஒரு ஏமாற்றமும் கோபமும் கலந்த முகபாவனையோடு முகத்தை வைத்துக் கொண்டு, கையிலிருந்த துண்டுப் பிரசுரங்களைத் தோளில் மாட்டியிருந்த Hand Bagல் திணிக்க, உள்ளிருந்த செல் போன் மீண்டும் சிணுங்கியது. (ஒரு கிறிஸ்துவ தோத்திரப் பாடல்)

INTERCUT

*கண்கலங்கும் நிலையில் மெர்லின், தோளில் செல்போனை திணித்துக்கொண்டு,*

Tupperware பேக்குக்களுக்கு Zip போட்டுக் கொண்டே ...

**மெர்லின்**

அம்மா ...!

ஜெனிஃபர் போனை எடுத்து, Headphoneல் மாட்டிக் கொண்டு, ஸ்கூட்டியை Start செய்து,

**ஜெனிஃபர்**

எனக்கு Phone பண்ற வேலை
வெச்சுக்காதன்னு சொன்னேன்ல!

ஜெனிஃபர் ஹெல்மட்டை மாட்டிக் கொள்கிறார்.

INTERCUT

**மெர்லின்**

இன்னிக்கு சாயங்காலம் உங்களை
பாக்க வருவோம்!

**ஜெனிஃபர்**

எப்ப வந்து பாத்தாலும் கர்த்தர்
கிருபையில உயிரோட தான்
இருப்பேன்! ஒன்னும் வரத்
தேவையில்ல! என்னை இறைவன்
எதுக்கு பணிச்சுறுக்காரோ அதை
முடிச்சுட்டு இறைவனோட
திருச்சபைக்கே போய் சேந்துடுவேன்!

INTERCUT

**மெர்லின்**

ம்மா! நீங்க எங்கயும் போ
வேணாம்மா! எங்கக் கூடவே
இருங்கம்மா!

மணிகண்டன் வீட்டினுள் நுழைதல்

ஜெனிஃபரின் ஸ்கூட்டி ஒரு traffic நிறைந்த சாலைக்குள் நுழைய ... வண்டியை நிறுத்திவிட்டு போனை 'கட்' செய்கிறார்.

**மெர்லின்**

ம்மா! நீங்க பேசறது கேக்க
மாட்டேங்குது. ஹலோ! ஹலோ!
ம்மா! ம்மா!

INTERCUT

SCENE 6.

continued as scene

*போனை வைத்த மெர்லின் கண்ணாடி முன்பு கண் கலங்கிய நிலையில் நின்றுக்கொண்டு அவசரஅவசரமாக தலைக்குப் பின்னலிட, பின்னால் மணிகண்டனின் குரல் ...*

**மணி**
போன்ல பேசாதன்னு சொன்னேன்ல!
நேர்ல போனா தான் சரியாகும்!
சொன்னா ஏன் கேக்க மாட்டேங்கிறீங்க
Mrs. மெர்லின்.

மெர்லின் சற்று அமைதிக்குப் பிறகு விசும்புகிறாள்.

**மெர்லின்**
எங்க மம்மி!எப்ப வேண்ணா
பேசுவேன்!

சற்று அழவும் தோன்ற அடக்கவும் தோன்ற மெர்லின் தவிக்கிறாள். மணியின் கைகள் அவள் தோளில் பரவுகிறது. மெர்லின் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்கிறாள்.

**மணிகண்டன்**
ஏண்டா இவனை கல்யாணம்
பண்ணோம்னு இருக்கா?

**மெர்லின்**
(மெதுவாக Smile செய்ய
முயற்சித்து ...)
நீ Christianன்னா
இருந்துருக்கலாமோன்னு தோணுது! ...

படக்கென்று முகத்தை மாற்றிக் கொண்டு ...

**மெர்லின்**
கிளம்பு ... கிளம்பு ... டைம் ஆச்சு
...

பரபரப்பானாள். தன்னுடைய தலைமுடியை காதுகளின் பின்புறமாய் இழுத்துவிட்டுக் கொண்டு தாலியை லேசாக பிளவுஸ்ஸுக்குள் தள்ள முடியுமா என்று பார்க்க ... சற்று நிதானித்து ... வெளியே நன்கு தெரியும் விதமாக ஆக்கிக் கொண்டாள்.

அதற்குள், எலிப்பொறியை பரணுக்கு எறிந்த மணிகண்டன் Tupperware பைகளை எடுத்துக்கொண்டு வெளியே வர ... மெர்லின், Jesus சிலையின் கால்களுக்கு அருகே இருந்த ஒரு அழகான குங்குமச்சிமிழை எடுத்து மணிகண்டனிடம் நீட்ட ...

**மணிகண்டன்**
எனக்காக ஒண்ணும்...

என்றபடி விலக

**மெர்லின்**
நீ வெச்சு விடுறீயா? நான்

வைச்சுக்கட்டுமா ...?

மணி வேறு வழியில்லாதது போன்ற முகபாவனையோடு வந்து சிமிழிலிருந்து பொட்டு எடுத்து வைக்க, பக்கத்திலிருந்த மல்லிகைப் பூவை எடுத்துக் கொண்டு பின்னிய கூந்தலில் Hairpin ஐ கடித்து குத்திக் கொண்டே சொன்னாள்.

**மெர்லின்**

நாளைக்கு காலைல churchக்குப் போறோம். ok?

மலர்ச்சியாய் சிரிக்கிறாள் மெர்லின்.

**SCENE 7.**

*ஒரு பெரிய கார் ஒன்று குறுகலான சந்தில் ஒரு கிழவரை இடித்து விட, plastic குடங்களோடு சைக்கிளில் வந்த கிழவர் plastic குடம் உடைய சைக்கிளோடு கீழே விழ, காரை விட்டு யாரோ ஒரு ‘டை’ கட்டிய நபர் தலையில் அடித்துக் கொண்டே இறங்குகிறார். சில பெண்கள் அலற. அதற்குள் முட்டியில் லேசாய் சிராய்த்த அக்கிழவரை குண்டுக்கட்டாக தூக்கியபடி காக்கிச் சட்டையும், ஒரு தடிப்பான கண்ணாடியும் அணிந்த வாலிபன் (உதயன்) காரை நோக்கி நடந்தான். அங்கிருந்த பையனை, காரின் கதவை திறக்கும்படி சைகை காண்பித்து*

**உதயன்**

ஏய்! திறடா!

அதற்குள் காரை ஓட்டி வந்த ‘டை’ கட்டிய மனிதர் உதயனை தடுக்க முற்பட ...

**கார் மனிதர்**

ஹலோ! ஹலோ! என்ன பண்றீங்க ...

பதிலேதும் சொல்லாத உதயன், கிழவரை காரின் பின் சீட்டில் கிடத்துகிறான். வெளியே வந்து கார் மனிதனை முறைத்து ... மிகவும் கேஷûவலாக ...

**உதயன்**

ஹாஸ்பிட்ல்ல அட்மிட் பண்ணி ...
fullஆ பாத்துக்குற ...

**கார் மனிதர்**

லேசா Scratch தானே ஆயிருக்கு ...

உதயன் ஓங்கி அறைய வந்தவனாய் .... நிறுத்திவிட்டு ...

**உதயன்**

உங்கொப்பனுக்குன்னா வுடுவுயாடா?
வண்டியை எடு ...

உள்ளே கிழவரின் அருகில் ஏறிக் கொண்டவனைப் பார்த்து ...

**உதயன்**

ஏய்! எதுன்னா போன் போடு ...

உதயன், பாக்கெட்டுக்குள் கையை விட்டு சிகரெட்டை வாயில் வைக்க, கார் மனிதன் பர்ஸை எடுத்துக் கொண்டே பேசினான்.

**கார் மனிதன்**

எவ்வளவுன்னு சொல்லுங்க ... நான்
இங்கேயே ...

உதயன் ‘தம்’மை பற்ற வைத்துக் கொண்டிருக்க, 500 ரூபாய் நோட்டு ஒன்றைத் தர முயல ... உதயன் நோட்டையும் அவனையும் பார்த்துவிட்டு, வாங்கிக் கொள்கிறான்.

**உதயன்**
இன்னொரு பத்தாயிரம் ரூபா எடு ...

**கார் மனிதன்**
ஹலோ! சின்ன அடிக்குப் போயி ...

பட்டேன்று உதயன் அந்த 500 ரூபாய் நோட்டை அவன் முகத்தில் எறிந்துவிட்டு ...

**உதயன்**
தெரிதுல்ல! உன் காசை வச்சு நாங்க என்ன கோட்டையா கட்டப் போறோம் ...? உன் அவசரத்துக்கு கிழவன், குழந்தைன்னு பாக்காம வந்து அடிப்பே ... ரூபா நோட்டை தூக்கிப் போட்டுட்டு ஆபிஸ்ல போய் Correct டைம்க்கு கையெழுத்து போடுவியா?

உனக்கு பொறுப்பு வரணும்டா! ஏறு வண்டியில!

உள்ளிருந்த பையனைப் பார்த்து

**உதயன்**
ஏய் ரவி! எல்லாம் முடிச்சு தாத்தா இங்க வரணும் புரியுதா? இதே கார்ல ...

**உள்ளிருந்த பயைன்**
நீ வுடுன்னா ...! நான் பாத்துக்குறேன்.

அதற்குள் பயந்து போன கார் மனிதன் உள்ளே அமர்ந்து கொண்டு Tissue பேப்பரை வைத்து காரில் ஒட்டிக் கொண்ட ரத்தக் கறையை துடைத்துக் கொண்டிருக்க ... படக்கென்று முகத்தை உள்ளே நுழைத்த உதயன், கார் மனிதனிடம் சொன்னான்.

**உதயன்**
இதே தெருவுல நீ அடிபட்டு விழுந்தாலும் நாங்க தான் வருவோம்! உன்னை மாதிரி கார்க்காரன் போயிட்டே இருப்பான் ...! இதெல்லாம் இனிமேவாது கத்துக்கோ ...! வண்டியை எடு!

இப்படிச் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ஹாரன்கள் பின்புலத்தில் ஒலிக்க, உதயன் தலையை எடுத்துக் கொண்டு, பின்னே நகர்ந்து புகையை இழுத்துக் கொண்டு, நடந்தான். கார் கிளம்பி விட, பின்னே ஜெனிஃபர் (மெர்லினின் அம்மா) அவருடைய ஸ்கூட்டியிலும், அருகில், ஒரு ஐயர் Bikeலும் ஹாரனை அடித்துக் கொண்டே நிற்க ...

**உதயன்**

ரோட்டுல எவன் அடிபட்டு
விழுந்தாலும், punctual ஆ
கோயிலுக்குப் போயி பிள்ளையாருக்கு
நெய்வைத்தியம் பண்ணாதான்
மோட்சத்துல சீட் கிடைக்கும்ல!

ஐயர் எச்சிலை விழுங்கியபடி போக, ஜெனிஃபர் உதயனை மிரட்சியுடன் பார்த்தபடி வண்டியை நகர்த்துகிறார்.

உதயன் ஐயரின் வண்டியை எட்டிவிட அதன் மட்கார்டில், "வாழ்க வளமுடன்" என்ற ஸ்டிக்கர் மினுமினுக்கிறது.

SCENE 8. MONTAGE...

1.1. Merlin and Manikandan start their bike and comes across the station road, as the electric train passes along.

1.2. ஒரு ரயில்வே ஸ்டேஷன் கவுண்டரில் பெரிய க்யூ நிற்பதைப் பார்த்துவிட்டு மெர்லின் பதற்றமாய் அலுத்துக் கொள்ள, மணிகண்டன் தன்னுடைய பைக்கில் அவளை ஏற்றிக் கொள்கிறான்.

2. சைக்கிளும் ஆட்டோவும் பின்புலத்தில் நிற்க ஆட்டோ ஓட்டிய சிறுவன் அழுத முகமாய் இருக்க, அவன் அம்மா அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டு தலையை சீவ, அவன் எதையோ பார்த்து முகம் மலர்கிறான்.

பார்த்தால் அது அவன் பையருகில் இருக்கும் லாலிபாப்பும் cadbury's choclateம். இரண்டின் மீதும் கை வைக்க, ஒரு கையில் அம்மா அடி கொடுக்க, அவன் முறைக்கிறான். 'சாயங்காலம் வந்து சாப்பிடு' என்று அவள் சொல்கிறாள். வாயில் லாலிபாப்போடு ஆட்டோ அருகில் வந்தவன், டிரைவர் சீட் பகுதிக்குள் செல்ல அவன் அம்மாவைக் கண்டதும் அந்தப் பக்கம் வெளியேறி பின்சீட்டுக்கு கம்பிகள் இருக்கும் நுழைவு வழியாக ஏறிக் கொள்கிறான்.

3. காலையில் வாக்கிங் செய்துகொண்டிருந்த தம்பதியர் வீட்டைப் பூட்டி விட்டுக் கிளம்ப முற்பட, ஏதோ நினைவுக்கு வந்ததைப் போன்று பூட்டிக்கொண்டிருந்த மனைவி மீண்டும் திறந்து, உள்ளிருந்து ஹெல்மெட்டை எடுத்துக் கொண்டு வர, கீழே முதியவராகிய கணவன் ஹாரனை ஒலித்து அவசரமாய் வரச் சொல்ல, மனைவி எரிச்சலாய் "வர்றேன்!" என்ற பாவணை செய்தல்.

**பிரின்சிபல்லின் மனைவி ராதா**

அப்பப்பப்பா! conference
போயிருந்தீங்கன்னா நான்
ஆட்டோவுலயாவது போயிருப்பேன்!

4. எதையோ நினைத்துக் கொண்டு பைக்கில் சென்று கொண்டிருக்கும் கணவனை மேலும் இறுக்கிக் கொண்ட மெர்லின் திடீரென்று ரோட்டில் சென்றுக் கொண்டிருந்த வேறொரு பெண்ணின் துப்பட்டா பைக்கில் மாட்ட முற்பட, தன் கணவனிடம் அதைத் தெரியப்படுத்தி, அவனை அவசரப்படுத்தி, அந்த வண்டியை overtake செய்து, அந்த துப்பட்டா பெண்மணியை எச்சரிக்கை செய்ய, அவள் சிரித்தபடி தாங்கஸ் சொல்லுதல். அவள் கையிலிருக்கும் குழந்தைக்கு மெர்லின் 'Bye" சொல்லுதல்.

5. கூட்ட நெரிசலான ஒரு எலக்ட்ரிக் ரயிலில் கூட்டத்துக்கு இடையே நின்று கொண்டிருந்த ஒரு ஊனமுற்றவருக்கு உட்கார இடம் அளித்து எழுந்து நின்று மீண்டும் புத்தகத்தைத் தொடர்கிறான், உதயன். அந்த புத்தகத்தின் முகப்பில் “தாய்” என்று எழுதியிருக்கிறது.

6. மெர்லினின் தாய் ஜெனிஃபர் ஒரு போஸ்ட் ஆபிஸீக்குள் நுழைந்து, காக்கி நிறப் புடவையோடு/ சட்டையோடு, பெரிய கட்டு லெட்டர்களையும் ஒரு ஜோல்னா பையை தோளிலும் சுமந்து கொண்டு வெளியே வந்து, மிகவும் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு லேடீஸ் சைக்கிளை சாவியிட்டுத் திறந்து standஐ ரிலீஸ் செய்கிறார்.

7. ஒரு கால் பைக்கில் standஐப் போட, அதில் அந்த முதியவரும் அவர் மனைவியும் இறங்குகிறார்கள். அது ஒரு Bike Standஆக இருக்கிறது. ஒரு செக்யூரிட்டி வணக்கம் அடிக்க, அத்தம்பதியினர் நடக்க நடக்க வழி நெடுகிலும் பார்ப்பவர் எல்லாம் அரை வணக்கம், கால் வணக்கம் வைக்க, வேகமாக முதியவர் ஒரு அறைக்குள் நுழைய அதன் மேல் 'Principal' என்று எழுதியிருக்கிறது. முதியவரின் மனைவி அதற்குள் செல்லாமல் சற்றுத்தாண்டி நடக்க, வழியில் ஒரு பெரிய ஸ்டூடண்ட், 'Good morning’ சொல்ல, அவன் கன்னத்தைக் கிள்ளியபடி, “ஒரு அறைக்குள் நுழைகிறார். அதன் மேல் Staff Room’ என்று எழுதியிருக்கிறது. ஒரு Teacher வழியில்,

**TEACHER**
சார்! conference ன்னு
சொல்லிருந்தீங்களே!

**PRINCIPAL**
Postponed! நான் எதோ இன்னிக்கு
ஸ்கூலுக்கு வரணும்ணு இருக்கு போல
...!

8. Central Jailக்கு அருகிலிருக்கும் ஒரு பெரிய ஏசுவின் சிலையைப் பார்த்துக் கொண்டே மெர்லினும் மணிகண்டனும் விரைந்து ஒரு பாலத்தில் பயணிக்கிறார்கள்.

9. அம்மா இறுக்கமான முகத்தோடும், ஒரு காக்கிச் சட்டையோடும் ஆட்டோவை ஓட்ட, பின்சீட்டின் ஓரமாக, வெளிச்சமும் காற்றும்பட லாலிபாப்பை மென்றபடி வேடிக்கை பார்த்தவண்ணம் அருகில் பையின் மீது கைவைத்துக் கொண்டே வருகிறான் சிறுவன். தன்னுடைய யூனிஃபார்ம் போட்ட சற்று பெரிய வயது மாணவிகள் சைக்கிளில் வருவதை ஆட்டோவை விட்டு எட்டி வாயிலிருந்த அந்த லாலிபாப்பை எடுத்து, பார்த்துவிட்டு, மீண்டும் ஸீட்டில் சாய்ந்தபடி லாலிபாப்பை வைத்துக் கொள்கிறான்.

10. எண்ணூர்ப் பகுதியில் உள்ள ஏதோ ஒரு பெயர் தெரியாத factoryயில் தான் போட்டிருக்கும் அதே கலர் பேண்ட் சட்டையைப் போன்ற மற்ற நூற்றுக்கணக்கான மனிதர்களோடு உதயனும் கலக்கிறான்.

11. ஒரு பள்ளியின் வாசலில் கூட்டமாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விட்டுக் கொண்டிருக்க ஆட்டோவும் நிற்கிறது. வாயில் லாலிபாப்பும், கையில் Lunch Bag மாக நடையைக் கட்டுகிறான் சிறுவன். அம்மா திட்டி அழைத்து, அவன் தோளில் பையை மாட்டிவிட, மாட்டிக் கொள்கிறான் சிறுவன். பின்புலத்தில் ஒரு பைக்காரர், ஆச்சரியத்துடன் ஆட்டோக்கார

அம்மணியைப் பார்க்கிறார்.

12. பெல்லடிக்கும் சத்தம் பெரிதாய்க் கேட்கிறது. காலியான பள்ளியின் வாசலில் மெர்லின் - மணிகண்டனின் பைக் நுழைகிறது. மெர்லின் அவசரமாக இறங்கிக் கொள்ள, குறுங்காட்சி ஒன்று விரிகிறது.

SCENE 9.

*மெர்லின் இறங்கிக் கொள்ள மணிகண்டன் Handle Barல் இருந்து Lunchbag ஐ எடுத்தபடி கேட்டான்.*

**மணிகண்டன்**
சாயங்காலம் எங்க...?

தன்னுடைய பள்ளி security பார்க்கிறார் என்ற ஜாடையிலும், சற்றே வெட்கத்திலும், 'வேண்டாம்' என்று சைகை காட்டுகிறாள்.

மணி Lunch Bagஐக் கொடுத்து, கையைப் பிடித்துக் கொண்டு

**மணிகண்டன்**
ஏ! பீச்சா? மூவியா? சொல்லிட்டுப்
போ! ...

மெர்லின் கைகளை விடுவித்துக் கொண்டு

**மெர்லின்**
(ஒருவிதப் பதற்றத்துடன்)
ச்ச்

**மெர்லின்**
அம்மாவை பார்க்கப் போணும்!
இல்லன்ன church...

என்றபடி தன்னுடைய செல்ஃபோனைக் காட்டுகிறாள்.

**மெர்லின்**
'மெசெஜ்! மெசெஜ்'

என்று முணுமுணுக்கிறாள்.

மணிகண்டன் லேசாக புன்முறுவல் பூக்கிறான். வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், corridorல் அவசரமாக ஓடுகிறாள். எதிரில் ஒருவர் long size நோட்டோடு வர, வழியில் நின்று அதை வாங்கி கையெழுத்திடுகிறாள். ஒரு சிறுமி கையில் duster, சாக்பீஸோடு வந்து நின்று "Good Morning" சொல்லிவிட்டு செல்கிறாள். (அங்கயற்கன்னி)

கையெழுத்திடும் பின்பு, மெர்லின் என்ற பெயருக்கு அருகே மணிகண்டன் என்று சேர்த்துக் கொண்டு கையெழுத்திட புன்புலத்தில் ஏதோ ஒரு வகுப்பில், 'Good morning Miss" என்று கோரஸாக குழந்தைகள் ராகம் பாடுகிறார்கள்.

SCENE 10.

*Staff Room க்கு உள்ளே நுழைந்ததும் அங்கே ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.*

**மீனாட்சி சுந்தரம்**

No! No! No! Don't Mistake me! Don't Mistake me!

**பத்மாவதி**
அப்போ, Scientific ஆ approachபண்ணவே முடியாதா? நீங்க சொல்லித் தரலைன்னா சினிமா சொல்லித் தரப் போவுது ... Book .... internet இன்னும் என்னென்னவோ இருக்கு ...

**மீனாட்சி சுந்தரம்**
See! See! You don't mistake me! இதெல்லாம் இருக்கு! இல்லங்கல! Parliament Committee Contry full ஆ போயிட்டு வந்து clear ஆ report குடுத்துட்டாங்க ...

**அருந்ததி**
அந்த Report ல தமிழ்நாடு Schools மட்டும் தான் exception. அது தெரியுமா? Almost all the schools in Tamil Nadu has given full support to Sex Education / Adolescent Education.

ஏதோ பேப்பரை திருத்தியபடி **கிருஷ்ணவேணி** பேசுகிறார்.

**கிருஷ்ணவேணி**
Madam! Don't tell all the schools! நம்ம School எல்லாம் வரவே இல்ல!

**அருந்ததி**
No! No! Almost ன்னு தான் சொல்றேன்!

**பத்மாவதி**
யார்கிட்ட இருந்தோ பிள்ளைங்க தப்பா தெரிஞ்சுக்குற Sexuality நம்மகிட்ட இருந்து தெளிவா தெரிஞ்சுகிட்டுமே! What's Wrong in it?

**கிருஷ்ண வேணி**
Madam! என்னோட Sister, Anandha Vidhya Bhavanல Work பண்றால! You won't believe! 3rd standard பையன் love letter எழுதுறானாம்!

**மீனாட்சி சுந்தரம்**
Correct! அது ஒண்ணு தான் Spelling mistake இல்லாம எழுதுவான்!

(பலத்த சிரிப்பு) கிருஷ்ண வேணியும் சிரிக்க ...

**பத்மாவதி & அருந்ததி**
அதத்தான் சொல்றோம்! that is exactly what we talk about!

மேற்கண்ட வாக்குவாதம் ஆரம்பிக்கும் போதே Staff Room க்கு உள்ளே நுழைந்த மெர்லின் தன்னுடைய இருக்கைக்கு வர அதன் அருகே இருந்த முதியவரின் (Principal ன்) மனைவி (ராதா தணிகாசலம்) பெரும் முகமலர்ச்சியுடன் வரவேற்கிறார்.

**ராதா**
ஹலோ! Baby! என்ன Wedding
Celebrationல்லாம் over ஆ

அவர் சொல்லி முடிப்பதற்குள் **ஐஸ்வர்யா** டீச்சர் மெர்லினிடம் ஓடி வருகிறாள். பிரசாமாய் சிரித்துக் கொண்டே பேசினாள்.

**ஐஸ்வர்யா**
ஏய்! மெர்லின்! எப்டி இருக்கே ...

மெர்லின் Sweet Box ஐ திறந்து காண்பிக்க ... ஸ்வீட்டை எடுத்தபடியே பேசினாள் ஐஸ்வர்யா.

**ஐஸ்வர்யா**
என்ன சொல்றார் மிஸ்டர்
மணிகண்டன். இன்னும் கொஞ்சநாள்
லீவு போடுங்கிறாரா?
(பலத்த சிரிப்பு)
எப்படியோ P.E.T. Master கிட்ட இருந்து
தப்பிச்சுட்ட ...

**ராதா**
ஐஸ்! Shut up!

ஐஸ்வர்யா சிரித்தபடி மெர்லினை அணைத்து, நெற்றியில் முத்தமிட்டு,

**ஐஸ்வர்யா**
God bless you!!

**ராதா**
எல்லாருக்கும் Sweets குடு!

**ஐஸ்வர்யா**
ஏ! மெர்லின்! As usual Debate! School
ல Sex Education வேணுமா?
வேண்டான்னு ...! நீ என்ன
சொல்ற...?

**மெர்லின்**
(சற்றே குழம்பியவளாய் ...
உதட்டைப் பிதுக்கி)
தெரியல ...

அவளின் கவனம் முழுவதும் அனைவருக்கும் Sweets கொடுப்பதிலேயே இருக்க ...

**ஐஸ்வர்யா**
யோசிச்சு வை! நான் class க்கு
போயிட்டு வந்திர்றேன் ...

மெர்லின் கையிலிருந்த செல்போனை நோண்ட,

**ஐஸ்வர்யா**
ஏ! உன்னை தான்!

ஒரு நோட்டோடு ஐஸ்வர்யா செல்ல,

**மெர்லின்**
OK! OK!

மெர்லின் Sweet ஸ்ஸோடு மற்றவர்களிடம் முற்படுகிறாள். விரலிடுக்கில் ஒரு பேனாவை வைத்துக்கொண்டு மீனாட்சி சுந்தரம் பேசிக் கொண்டிருக்க,

**மீனாட்சி சுந்தரம்**
No! No! You don't mistake me! நான் என்ன சொல்லவரேன்னா

பேசிக்கொண்டே மெர்லின் கொடுத்த Sweets ஐ எடுத்துக் கொள்ள,

**மீனாட்சி சுந்தரம்**
Happy birthday ம்மா! வயசென்ன?

அனைவரும் சிரிக்கின்றனர்.

**கிருஷ்ணவேணி**
அவள் கல்யாணத்துக்கு Sweet குடுக்கிறா!

**மீனாட்சி சுந்தரம்**
ஓ! Wedding க்கு invitation எல்லாம் இல்லியா?

**மெர்லின்**
கல்யாணம் முடிஞ்சுது சார்! Register Marriage! Sorry! யாரையும் Invite பண்ணல!

**மீனாட்சி சுந்தரம்**
Cheap ஆ முடிச்சிட்டீங்கன்னு சொல்லுங்கோ! Very Good Very Good ரெண்டு எடுத்துக்குறேன் ... ம்!

அவர் இன்னொன்றை எடுக்க, குறைத்தே வாங்கியிருந்த மெர்லின் எச்சிலை முழுங்குகிறாள்.

**பத்மாவதி**
புதுப்பொண்ணு! Congratulations!

**அருந்ததி**
See! I am proud of her! யார்ன்னாலும் Confident ஆ ஒரு விஷயத்தை decide பண்றதுக்கு, அவங்க sexuality ல தெளிவா இருக்கணும்! அதுக்கு School ல்லயே Adolescete Education ஆரம்பிக்கணும். Am I right Merlin?

அருந்ததி ஸ்வீட்டை எடுத்துக் கொள்ள, மெர்லின் முழிக்கிறாள்.

திடீரென்று Staff room வாசலில் ஒரு ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஓடிவந்து, நின்றுக்கொண்டு,

**1**
மிஸ்! மிஸ்! என் மேல U. Karthick தண்ணியடிக்கிறான் மிஸ்!

அவசர அவசரமாக U. Karthick ஓடி வந்து,

**2**

இவன் தான் Miss bad words லயே
என்ன திட்றான். Promise மிஸ்!

**ராதா**
Go to your classes! உங்க மிஸ்
வந்துட்டுறுக்காங்க பாரு!

**CHORUS 1& 2**
OK மிஸ்!

**1**
ஏய்! வாடா! மிஸ் வந்துட்டாங்களாம்
...

**மீனாட்சி சுந்தரம்**
பாருங்க! இதுக்கல்லா நம்ம
Adolescence Education ஆரம்பிச்சா
நம்ம நிலைமை என்ன ஆவுறது?
எல்லா கேள்விக்கும் பதில் சொல்ல
முடியுமா?

**ராதா**
மீனாட்சி சார்! இந்த 9'A' Notes
ரெடிங்களா?

**மீனாட்சி சுந்தரம்**
தோ முடிச்சுடுறேன் மேடம்! உங்க கூட
பேச ஆரம்பிச்சா வேலையே ஓடாது.

**பத்மாவதி**
மீனாட்சி Sir! I am Handling Chapter
11, today. Class க்கு வர்றீங்களா?

**மீனாட்சி சுந்தரம்**
நான் Chapter 11 hundred வரைக்கும்
பாத்தாச்சு Madam! போயிட்டு வாங்க!
போயிட்டு வாங்க ...

பத்மாவதி உட்பட எல்லோரும் சிரிக்கிறார்கள் ... பத்மாவதி Staff Roomக்கு ஒரு புத்தகத்துடன் வெளியே செல்ல மெர்லின் ஒரு கையில் புக்குடனும், மற்றொரு கையில் செல் போனுடனும் வேறு பக்கம் செல்கிறாள்.

SCENE 11.

*ஐஸ்வர்யா டீச்சர் போர்டில் எதையோ எழுதிக் கொண்டிருக்க, அவருடைய காலடியில் மடிக்கப்பட்ட ஒரு சாக்லேட் பேப்பர் வந்து விழுகிறது. ஐஸ்வர்யா டீச்சர் திரும்பாமல் சொல்கிறார்.*

**ஐஸ்வர்யா**
செழியன் ...

ஆட்டோ ஓட்டிய அதே சிறுவன் வாயில் சாக்லெட்டோடு கையில் ரப்பர் பேண்டோடு 'மிஸ்' என்கிறான் ...

**செழியன்**
மிஸ் ...

அவன் சொன்ன வேகத்தில் வாயிலிருந்த சாக்லேட் வந்து
வெளியே விழ ... அருகிலிருந்தவர்கள் சிரிக்கிறார்கள்.

ஐஸ்வர்யா டீச்சர் திரும்பி சொல்கிறார்.

**ஐஸ்வர்யா**

யாரு இந்த Poemஅ என் கூடவே சேர்ந்து
சொல்லி இந்த class முடியிறதுக்குள்ள
மனப்பாடம் பண்றாங்களோ
அவங்களுக்கு நிகிலா, மிஸ்ஸுக்குக்
கொடுத்த Cadburys Chocalate. OK va?

மற்ற எல்லோரும் யூனிஃபார்மில் இருக்க நிகிலா மட்டும் color dress ல் இருக்கிறாள். (அன்று அவளுக்கு பிறந்த நாள்)

**எல்லோரும்**

OK!

செழியன் மட்டும் முணுமுணுக்கிறான்.

**செழியன்**

இதென்ன பெருசா? நிகிலா கிட்டயே
நான் வாங்கிப்பேன்.

என்றபடி தன்னுடைய தகர பாக்ஸை எடுத்து வெளியில் வைக்க... ஐஸ்வர்யா டீச்சர் அந்த Poem ஐ ஆரம்பிக்கிறார். அனைவரும் அவரோடு இணைந்து Poem ஐ repeat செய்ய, அவசர அவசரமாய் செழியன் ஒரு ஒரு சிறுமியிடமும் ரப்பர்பேண்ட் கேட்கிறான். Poemஐ பாடிக் கொண்டே சில சிறுமிகள் சிரித்துக்கொண்டும், சில சிறுமிகள் கோபமாகவும் தலையில் உள்ள ரப்பர் பேண்டை அவிழ்த்துக் கொடுக்க, பென்சில் டப்பாவில் இருந்த ரப்பர் பேண்டையும் எடுத்துக் கொடுக்க, அவற்றை தன்னுடைய தகர டப்பாவில் குறுக்கும் நெடுக்குமாக மாட்டிக் கொள்ள, அதே Poemஇரண்டாம் முறை ஐஸ்வர்யா டீச்சர் பாட ஆரம்பிக்க அதற்கு ஏற்றாற் போல் வாசிக்கிறான். மிகவும் பொருத்தமாக அமைய அதைத் தொடர்கிறான். Poem நின்றுவிடுகிறது. செழியன் மட்டும் அதில் லயித்து வாசித்துக் கொண்டிருக்க, ஐஸ்வர்யா டீச்சர் அருகில் வந்து உற்றுப் பார்க்கிறார். செழியன் மேலே பார்த்து சிரிக்கிறான். டீச்சரும் சிரிக்கிறார்.

**Sing a song of people Who like to come and go;**
**Sing a song of people who like to come and go;**
Sing a song of people, Walking fast or slow;
People in the city, Up and down they go.
People on the side walk, People on the bus;
People passing, passing, In back and front of us.
People on the subway underneath the ground;
People riding taxis Round and round and round.
People walking singly, People in a crowd;
People saying nothing. People talking loud.
People laughing smiling, Grumpy people too;
People who just hurry and never look at you!
**Sing a song of people who like to come and go;**
**Sing a song of people, who like to come and go;**
**Song of city people, you see but never know!**

Poem க்கு Montage ஆக ஒவ்வொரு teacher ம் அவரவர் வகுப்பில் எப்படிப் பாடம் நடத்துகிறார்கள் என்று வருகிறது.

மெர்லினுக்கு Message ஒன்று வர அதை அவசர அவசரமாக Cut செய்து Silent Modeல் போடுகிறாள். Message ஐ பார்த்தபடி சிரிக்கிறாள். சட்டென்று சாரதாரணமானவளாய் வகுப்பை

தொடர்கிறாள்.

INTERCUT

பத்மாவதி, teacher class ல் பதினோறாம் வகுப்பில் மாணவர்கள் பத்மாவதி டீச்சரை உற்று நோக்கிக் கொண்டிருக்க,

**பத்மாவதி**
இப்படிதான், அழகழகா நம்ம
எல்லாரும் இந்த உலகத்துல வந்து
பொறக்குறோம்.

மாணவர்கள் அனைவரும் கைத் தட்டுகிறார்கள். சில மாணவிகள் கண் கலங்குகிறார்கள். Ashok எழுந்து லேசாக விசில் அடிக்க முற்பட பத்மாவதி டீச்சர் அனைவரையும் அமைதியாக்க முயற்சிக்கிறார்.

**பத்மாவதி**
ஏய் Ashok! ...

SCENE 12.

*பின்னணியில் ராட்சத மிஷின்கள் உருமிக் கொண்டிருக்க, ஒரு ஹெல்மட்டை மாட்டிக் கொண்டிருந்த மணிகண்டன் குனிந்து தன்னுடைய செல்போனை நோண்டிக் கொண்டிருக்க, ஒரு Pad டுடன், ஒரு சிங்கும் இரு இளம்பெண்ணும் வருகிறார்கள்.*

**சிங்**
என்ன தல! ஒரே Chat தான் போல!
School ல பசங்குகளுக்கு எல்லாம் லீவு
தான் போல!

மணிகண்டன் சற்றும் கண்டுக் கொள்ளாமல் Chat செய்து கொண்டு இருக்க, இளம் பெண் (பிரியங்கா) பட்டென்று Phoneபிடுங்கிக் கொண்டு,

**பிரியங்கா**
ஏ! என்னய்யா கல்யாணத்துக்குத் தான்
கூப்பிடல! யாரு அந்த தேவதை? Photo
கூட காட்ட மாட்டியா?

போனைப் பிடுங்கிக் கொள்கிறாள்.

**மணிகண்டன்**
ஏ! ஏ! காட்டறேன் குடு!

போனைத் தராமல் பிரியங்கா பந்தாட,

**சிங்**
பிரியங்கா! Brilliant Choice! தல
கலக்கிடுச்சு!

**மணி**
Phone அ குடுங்குறன்ல!

பிரியங்கா
Photos காட்டுறியா? இல்லையா?

**மணிகண்டன்**
காட்றேன்யா.

போனை மணிகண்டனிடம் தர அவன் Photos folder ஐ எடுத்து Phone ல், Register Marriage Photos எல்லாம் ஒவ்வொன்றாய் வருகிறது! போட்டோக்களைப் பார்த்தபடி பிரியங்காவின் குரலும், மணிகண்டனின் குரலும் கேட்கின்றன.

**பிரியங்கா**
வாவ்! Damn Cute யா? மலையாளியா?

**மணிகண்டன்**
இல்லல்ல! தமிழ்நாடு Christian

**பிரியங்கா**
உனக்கு Too much தான் மணி! இது யாரு.

**மணிகண்டன்**
இது அவங்க School Principal! இது அவங்க Wife! அதே ஸ்கூல்ல தான் work பண்றாங்க. Very Supportive! Merlin அவங்கதான் guardian Sign. இது தெரியும்ல! வித்யாசாகர்! My Big Dad!

**பிரியங்கா**
ம்! ம்! என்னைல்லாம் தான்யா கூப்பிடல! இவன் எங்க சிங்?

**சிங்**
இந்த Photo ல்லாம் யாரு எடுத்தா? ஒரே ஒரு Photoல்லாம் தான் இருப்பேன்! இதோ பார்!

**மணி**
ஏ! நீ வேற! Register office இவ்ளூண்டு இடம்! இடமே பத்தல! விடு! உனக்கு seperate treat!

தம்பதியினர் ஐஸ்வர்யா teacher ன் குடும்பத்தோடு எடுத்துக் கொண்ட படம் வரும் போது, படக்கென்று Message ஒன்று வந்து விட, அனுப்பியவரின் பெயராக  Bablooo என்று வருகிறது.

**பிரியங்கா**
யாரது பப்ளூளூளூ

**சிங்**
ஏ! ஏ! (சிரிப்புடன்) இது பப்ளூளூளூ இல்ல! பப்ளூ! ஹ ஹ ஹ!

மணிகண்டன் போனைப் பிடுங்கி மெசேஜைப் பார்ப்பதற்கும் மீசைக்கார பாஸ் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருக்கிறது.

**மீசை**
மணி! டிசைன்லாம் throughல்ல! When are you sending it to my table?

**மணி**
Almost ready Sir! By two sir ...?

**மீசை**
ம்ம்! Make it a little early! Mr.

Kapoor is coming by six... நீ இருப்பல்ல!

**மணி**
யாரு சார்!

பிரியங்கா
Yashraj Kapoor!

**மீசை**
Clientயா! என்ன முழிக்கற!

**மணி**
ஓ! Sure! Sure!

மீசை ஒரு giftஐ நீட்டுகிறார்

**மீசை**
By the way, You got marriedல்ல!

**மணி**
thank you Sir! Thank you so much!

**மீசை**
பிரிச்சு பாருங்க ...

மணி பிரிக்க அது ஒரு புத்தகம். புத்தகத்தின் பெயர் '"Men are from Mars! Women are from Venus!" என்று இருக்கிறது!

**பிரியங்கா**
Nice gift Sir!

**மீசை**
Very important Bookல்ல ...

மணிகண்டனுக்கு மெசெஜ் வருகிறது.

SCENE 13.

*பள்ளி கடிகாரத்தில் 11.00 மணி என்பது 12.30 யாய் மாற,*

*ஒரு மணி அடிக்கப் படுகிறது. பிள்ளைகள் Lunch பையை எடுத்துக் கொண்டு வேகமாய் அங்கும் இங்கும் ஓட, மெர்லின் போனில் பேசுகிறாள்.*

**மெர்லின்**
சாப்பிட்டியா?
என்னவோ தெரியல! I miss you so much.
Evening Beachக்கே போலாம்! உனக்கு எங்க போணும்னு தோணுதோ அங்கேயே!

Principal அவளை நோக்கி நடந்து வர மெர்லின் போனை வைக்க முயற்சிக்கிறாள்.

**மெர்லின்**
சரி! நான் அப்புறம் கூப்பிடுறேன் ...

**PRINCIPAL**

மெர்லின்! உள்ளவா!

Principal Staff Roomக்குள் நுழைய சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுகிறார்கள். Principal அருகில் மெர்லின் நிற்கிறாள். Principal ன் மனைவி எழாமல் இருப்பதை கவனித்து விட்ட Principal அனைவரையும் உட்காரச் சொல்கிறார்.

**PRINCIPAL**
(சிரிப்பு)
As you all know, Merlin has got married.
As usual, class முடிஞ்சதும் சரியா 3.
we will have sweet, kaaram, coffee,

'Ok Sir! OK Sir! என்று சில சத்தங்கள் கேட்கிறது. சிலர் கைத் தட்டுகிறார்கள். Principal நகர ...

**மீனாட்சி சுந்தரம்**
(கையில் tiffin boxவுடன்)
எங்க சார் ... இங்கியா?

**PRINCIPAL**
ம் ...?

**மீனாட்சி சுந்தரம்**
இல்ல இங்கியா? உங்க ரூமுக்கு வந்துடனுமா?

**PRINCIPAL**
இங்க தான்! இங்க தான்!

என்றபடி நகர ஆரம்பிக்கிறார்.

**MERLIN**
Thankyou Sir!

தன்னுடைய போனில், 'Meet you at 4.00 p.m. at Beach Station. OK?" என்று அடித்துவிட்டு சீலிங்கைப் பார்க்கிறாள்.

SCENE 14.

*Lunch hour ல் எல்லாப் பிள்ளைகளும் சாப்பிட்டுக் கொண்டிருக்க, செழியன் மட்டும் தன்னுடைய tiffin box ஐ எடுத்துக் கொண்டு யாரும் பார்த்துவிடாத வண்ணம் நடக்கிறான். tiffin box ஐ மூடி வைத்துக் கொண்டு யதார்த்தமாக கையில் வைத்துக் கொண்டு வழியில் வருவோர் போவோரை பார்த்து கையசைத்துக் கொண்டும் யாரும் தன்னை கவனித்துவிடக் கூடாது என்றும் நடக்க நடக்க பள்ளியின் பின்புறத்துக்கு வந்துவிடுகிறான்.*

*பின்புறத்தில் உள்ள செடிகளுக்கு நடுவே வேகமாக நடக்க, அவன் வேகம் அதிகமாகிறது. வியர்க்க விறுவிறுக்க நடக்கிறான். Tiffin Box ஐ ஒரு Compound சுவர் மீது வைத்து விட்டு மேல் ஏறுகிறான். Tiffin Box ஐ அவசர அவசரமாகத் திறந்து உணவை கொட்ட ஆரம்பிக்க திடீரென்று பின்னிருந்து ஒரு குரல். திரும்பினால் கொழுமொழு வென்று ஒரு சிறுமி அவன் classmate பிந்து. கையில் ஏதோ chips பாக்கெட். மூக்கை உறிந்து கொண்டே கேட்கிறாள்.*

**பிந்து**
செழியன்! சாப்பாட்டைக் கொட்டுறீயா?

செழியன் அவள் அடுத்து என்ன செய்யப் போகிறாள் என்று புரிந்தவனாய் சுவரை விட்டு குதித்து tiffin Box கையோடு துரத்துகிறான். பிந்து கையிலிருந்த chips packetடோடு ஓட, விடாமல் chase நடக்கிறது!

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பெரிய மாணவிகளுக்கு மத்தியில் ஓட, ஒரு பெரிய மாணவி கத்துகிறாள்.

**பெரிய மாணவி**
டேய் செழியா! ஏன்டா ஓடுற?

**செழியன்**
போடி குருவிக்கூடுத்தலை

ஓட்டம் எடுத்த பிந்து Staff roomஐ நோக்கி ஓட, செழியன் கிட்டத்தட்ட அவளைப் பிடித்துவிட எதிரில் மீனாட்சி சுந்தரம், teacher வந்து நிற்கிறார், பெரிய ஏப்பத்துடன். அதற்குள் பிந்துவுக்கும் சாருக்கும் நடுவில் புகுந்துவிடும் செழியன்,

**செழியன்**
Intervalலயே எ.காயத்ரியோட
இட்லியை அமுக்கி அமுக்கி துன்னியே!
சொல்லட்டா?

**மீனாட்சி சுந்தரம்**
என்னம்மா குழந்தை! ஏதோ ஓடி வந்த
... சொல்ல
வந்த! என்ன விஷயம்?

பிந்து எதுவும் பேசாமல் chips பாக்கெட்டை அவரிடம் நீட்ட, மீ.சு. சிரித்துக் கொண்டே அதை எடுக்க வர, செழியன் பிந்துவின் chips பாக்கெட்டை லேசாக விலக்கியபடியே சொல்கிறான்.

**செழியன்**
ஒன்னும் இல்ல! ஒன்னும் இல்ல!
நீங்கபோய் உங்க வேலையைப்
பாருங்க!

chips பாக்கெட்டில் இருந்து செழியன் எடுத்து தன் வாயில் போட்டுக் கொள்கிறான். எரிசலாகி விடுகிற மீ.சு.,

**மீனாட்சி சுந்தரம்**
(பிந்துவை முறைத்தபடியே ...)
நாலு வருஷத்துல என் கிளாஸுக்குத்
தானே வருவே, வாடா! வா!

**செழியன்**
(முணுமுணுக்கிறான்)
அதுவரைக்கும் நீ உயிரோட
இருக்கியான்னு பாரு ...!

SCENE 15.

*Staff Room ல் உட்கார்ந்து பத்மாவதியும், அருந்ததியும் சாப்பிட்டுக் கொண்டிருக்க, எடுத்து வைத்த Tiffin Box ஐ*

*திறக்காமல் மெர்லின் செல்ஃபோனில் எதையோ பார்த்துக் கொண்டிருக்க, பின்னால் மீனாட்சி சுந்தரம் Staff Room க்குள் Water Bottle லில் தண்ணீர் குடித்துக் கொண்டே உள்ளே நுழைகிறார். கிருஷ்ணவேணி ஏதோ பேச்சு கொடுக்கிறார்.*

*P.T. Sir, (கண்ணன்) staf roomக்குள் நுழைந்து மெர்லினுக்கு எதிரே இருந்த தன்னுடைய seat ல் உட்காருகிறார். தன் கையிலிருந்த பிரம்பை மேசை மேல் வைத்து விட்டு desk அடியில் எதையோ தேடுவதைப் போல் மெர்லினை கவனிக்க, அவள் செல்போனோடு சிரித்தபடி இருக்கிறாள். அவள் கவனிக்கும்படி லேசாக கனைக்க, அவள் மதிக்கவேயில்லை.*

**கண்ணன்**

அருந்ததி மேடம்! நேத்து Liverpool எத்தனை கோல்ல ஜெயிச்சுது.

அருந்ததி ஆச்சரியமாகப் பார்க்க, கண்ணன் அருந்ததியையும் மெர்லினையும் மாறி மாறிப் பார்த்து பின்பு,

**கண்ணன்**

இல்ல மேடம்! நேத்து night full current கட்! லைட்டே இல்ல!

**அருந்ததி**

நேத்து matchஏ நடக்கலயே! ...

என்றபடி பத்மாவதியுடன் அருந்ததியும் நமட்டுச் சிரிப்பு சிரிக்க, எதையும் கண்டு கொள்ளாதவளாய் மெர்லின் செல்ஃபோனோடு மூழ்கிக் கிடக்க,

**கண்ணன்**

எனக்கெல்லாம் Sweet இல்லியா மேடம்!

என்று மெர்லினைப் பார்த்துக் கேட்க, அப்போதும் கவனிக்காத மெர்லினை, அருந்ததி உசுப்பி விட திடுக்கிட்டு போனை கீழே இறக்குகிறாள்.

**மெர்லின்**

ம்!?

**கண்ணன்**

இல்ல! எனக்கெல்லாம் Sweet கிடையாதான்னு கேட்டேன்.

**மெர்லின்**

ஓ! Sorry Sir!

என்று Phone ஐ வைத்துவிட்டு Sweet Boxஐத் தேடி எடுக்க, உள்ளே டப்பா காலியாக இருக்கிறது.

(எச்சிலை விழுங்கியபடி ...) மெர்லின் பேச வருவதற்குள் காலி டப்பாவை கவனித்துவிட்ட கண்ணன், பரவாயில்ல! பரவாயில்ல!' என்பது போல் கண்ணை மூடி கையை சைகை செய்கிறான்.

**மெர்லின்**

கரெக்டாத்தான் வாங்குனேன் ... Sorry Sir! நாளைக்கு Confirm ஆ தரேன் சார்.

சொல்லி முடிப்பதற்குள் எதுவும் பேசாமல் கையை “போதும் போதும்” என்ற பாவணையில் அசைக்கிறான்.

இதுவரையில் பின்புலத்தில் எதையோ கிருஷ்ணவேணியிடம் பேசிக் கொண்டிருந்த மீனாட்சி சுந்தரம், முடிக்க முற்பட்டார். அவர் கையில் ஒரு ஸ்வீட் இருக்க, சாப்பிட்டபடியே சொன்னார்.

**மீனாட்சி சுந்தரம்**
அப்புறம் என்ன? அந்த அபிஷ்டு தாடிவிடறான். குடிக்கிறான். அந்த பொண்ணு பைக்ல ஏறி போறதை பாத்துண்டே இருக்கான். தொடரும்னு போட்டான்! தற்கொலை பண்ணிக்கிறானா இல்லையான்னு நாளைக்குதான் தெரியும்!

**கண்ணன்** (V.O)
உதைப்பேன் ...!

லேசாக மீனாட்சி சுந்தரம் தலையை திருப்பிப் பார்க்க ...

**கண்ணன்** (V.O)

Ballஅ PTரூம்ல வைங்கடா!

மீண்டும் கிருஷ்ணவேணி பக்கம் திரும்பிய மீ.சு.,

**மீனாட்சி சுந்தரம்**
இப்படி போவுது கதை ...

SCENE 16. SUBSCENE

*அதே Staff Room ல், ஐஸ்வர்யா teacher, மெர்லினிடம் வந்துவிட,*

**மெர்லின்**
எங்கப் போன?

**ஐஸ்வர்யா**
ஏ! சாயங்காலம் எங்காயவது போறியா?

**மெர்லின்**
ஏன்? நீ எங்கியாவது போறீயா?

கவருக்குள் இருந்த சுடிதாரைக் காண்பிக்கிறாள்.

**ஐஸ்வர்யா**
(சிரிப்பு)
Movie!
(சிரிப்பு)
மாமியாருக்குத் தெரியாம!

**மெர்லின்**
அடிப்பாவி.

**ஐஸ்வர்யா**
ஏ! 7th periodயா! 5th 'B'....

கெஞ்சியபடி கண்ணைச் சுருக்குகிறாள் ...

**மெர்லின்**

Permission...?

அவள் ஒப்புக் கொண்டாள் என்று தெரிந்து குஷியாக சிரித்தபடி...

**ஐஸ்வர்யா**

காலையிலேயே Prinicipal கிட்ட
வாங்கியாச்சே ... எல்லாம் உன்னை
நம்பித்தான் ...
ஏ! பாத்துடி! coolஆ Handle பண்ணு!
அராத்து புடிச்ச class!

முகம் மலர்ச்சியுடன், கண்ணை மூடித்திறந்து, மெர்லின் சொன்னாள் ...

**மெர்லின்**

நான் பாத்துக்குறேன், enjoy!

பின்னணியில் Lunch hour முடிந்ததற்கான பெல்லடிக்கிறது.

SCENE 17.

*செழியனுடைய வகுப்பில் அறிமுகமில்லாத ஏதோ ஒரு ஆசிரியை பாடம் நடத்திக் கொண்டிருக்க, பக்கத்தில் இருந்த பிந்துவின் Pocket ல் இருந்து நைஸாக அவள் வெள்ளைக்கலர் கர்சிஃபை எடுக்கிறான்.*

*அந்த தமிழ் ஆசிரியைப் பாடத்தை எடுத்துவிட்டு,*

**ஆசிரியை**

ம்! எல்லாரும் புக்கை எடுங்க ...!
classwork நோட் யார்யார்லாம்
கொண்டு வரல ...

யாருமே எழவில்லை ...

ஆசிரியை செழியனைப் பார்க்கிறாள். அவன் பிந்துவின் Kerchiefஐ வைத்து முகத்தை மூடிக் கொண்டிருக்கிறான்.

**ஆசிரியை**

என்ன செழியன்? அமைதியா இருக்க?
எதாவது ஊமைக் குசும்பி வேலை
பாக்குறியா?

எல்லோரும் அவனைத் திரும்பிப் பார்க்க, செழியன் சட்டென்று Kerchief ஐ மேசை மீது வைத்துவிட்டு

**செழியன்**

மிஸ்!

தன்னுடைய classwork நோட்டைக் காட்டுகிறான்.

Subject line எதையோ dictate செய்ய மாணவர்கள் எழுத ஆரம்பிக்கிறார்கள் ...

SCENE 18.

*மணிகண்டன் தன்னுடைய ஆபிஸிலிருந்தபடி அவசர அவசரமாய்*

*தன், மீசை மானேஜர் கொடுத்த வேலையைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் செய்ய பதற்றமாய் Computer ல் எதையோ அடித்துக் கொண்டிருப்பான்.*

*திடீரென்று அதிர்ந்தவனாய் ...*

**மணிகண்டன்**
Shit!

என்று கத்த, சிங்கும் வேறொரு colleagueம் வருவார்கள்!

**சிங்**
என்ன மணி?

**மணிகண்டன்**
Software Corrupt ஆயிடுச்சு!

**மற்றொருவன்**
Cool! Cool! என்கிட்ட இருக்கு! Re install!

**மணிகண்டன்**
சீக்கிரம் குடு!

மெர்லினின் போன் வருகிறது. அதைக் கவனிக்காமல் மணிகண்டன் பதற்றமாய் வாங்க Software copy செய்ய முயற்சிக்க,

சிங் போன் வருவதைக் கவனிக்கிறான். அதில் Bablooo என்று வருகிறது.

**சிங்**
தல! அண்ணி!

மணி போனை எடுத்து

**மணி**
டேய்! நான் திருப்பிக் கூப்பிடுறேன்டா!

INTERCUT

SCENE 19.

*மெர்லின் ஒரு புத்தகத்தோடு போன் பேசியபடியே நடந்து வந்து கொண்டிருக்கிறாள்.*

**மெர்லின்**
இல்ல! இல்ல! seventh periodம் attend பண்றேன்! அதை சொல்லத்தான்! Phone silentல இருக்கும்! Ok? Bye! Bye!

என்றபடி செல்ல, கடந்து சென்ற க.கூ. P.T. Sir out of focusல் திரும்பிப் பார்த்துக் கொண்டே செல்கிறார்.

கூத்தும் கும்மாளமுமாக இருக்கும் 5'B' கிளாசுக்குள், அமைதியாகவும் சற்று கோபமுமான முகத்துடனும் மெர்லின் கையைக் கட்டிக் கொண்டு வந்து நிற்க, திடீரென்று அனைவரும் அமைதியாக மெர்லினை வெறிக்கிறார்கள். முறைத்தபடி மெர்லின் சொல்வாள்.

**மெர்லின்**

All of you! go to your places!

பயந்த முகமாய் அனைவரும் அவரவர் இடத்தில் அமைதியாய் அமர்கிறார்கள்.

Listen! உங்க சேட்டையெல்லாம் என்கிட்ட காட்டக் கூடாது! I want pindrop silence! Got it?

பெரிதும் பயந்தபடி பிள்ளைகள் அமர்ந்திருக்க, ஒரு சிறுமி இன்னொருத்தியிடம் குசுகுசுக்கிறாள்.

**அபர்ணா சிறுமி**

Substitute மிஸ்டி

செழியனும் அமைதியாக அதே Kerchiefவுடன் அமர்ந்திருக்கிறான்.

**மெர்லின்**

Take out your English books!
Aishwarya Mam காலைல என்ன நடத்துனாங்களோ அதைப் படிங்க!

பின்னால் பிந்து ஏதோ பேச முற்பட,

**மெர்லின்**

“Silence!” என்று மிரட்டுகிறாள்.

அனைவரும் அமைதியாக படித்துக் கொண்டிருக்க, Birthday கொண்டாடிய நிகிலா மட்டும் ஏங்கி ஏங்கி விசும்புகிறாள்.

அதை கவனித்துவிட்ட மெர்லின் மெதுவாக அருகில் வந்து,

**மெர்லின்**

Why are you crying baby?”

பதிலேதும் சொல்லாமல் இருக்க,

**மெர்லின்**

It's your birthday isn't it? what happend?

உடம்பு சரியில்லயா?

என்றபடி அவள் நெற்றியிலும் கழுத்திலும் கையை வைத்துப் பார்க்க,

மீண்டும் அவள் பதிலேதும் சொல்லாமல் இருக்க, அருகிலிருந்த சிறுமி சொன்னாள்.

**(அங்கையற்கன்னி) சிறுமி**

மிஸ் Lunch, செழியன் இன்னொரு Chocalate குடுன்னு கேட்டான் மிஸ்! இவ தந்தா மிஸ்! அதுக்கு செழியன் Happy Birthdayன்னு சொல்லி உம்மா குடுத்துட்டான் மிஸ்!

உடனே அனைவரும் சிரிக்க, சொன்ன சிறுமி மட்டும் ‘உம்’ மென்று இருக்கிறாள். நிகிலா மேலும் அழுகிறாள்.

**மெர்லின்**
யாரு செழியன்?

**(அங்கையற்கன்னி) சிறுமி**

அவன் தான் மிஸ்!

சட்டென்று கர்சீஃபை எடுத்த செழியன் மெர்லினை மிரட்சியோடு பார்த்தான். பின்பு அங்கையற்கன்னியை முறைக்க ...

**மெர்லின்**
செழியன்! come here!

அவன் எழுந்து வர, அந்த Kerchief கீழே விழுந்ததை கவனிக்காமல் teacherஐ நோக்கி நடந்தான்.

அருகில் வந்ததும்,

**மெர்லின்**
Sorry சொல்லு!

**செழியன்**
ஏன் மிஸ்?

**மெர்லின்**
Girlsக்கெல்லாம் Kiss குடுக்கலாமா?

**செழியன்**
குடுக்கலாமே மிஸ்! உங்களுக்கு Birthdayன்னா உங்களுக்குக் கூட குடுப்பேனே மிஸ்!

அனைவரும் சிரித்துவிட ...

மெர்லின் செழியனை பளீரேன்று தனிச்சையாக அறைகிறாள்.

சரியாக பட்டுவிட செழியன் அப்படியே திரும்பித் தரையில் விழுகிறான். அதிர்ச்சியடைந்த மெர்லின் அவனை உலுக்குகிறாள்.

**மெர்லின்**
டேய்! செழியன்! செழியன்! தண்ணி குடுங்க ...

மெர்லின், அவன் தலையைத் திருப்ப, அவன் மூக்கில் இருந்து ரத்தம் வடிகிறது. பிள்ளைகள் அனைவரும் அவனை நோக்கி ஓடிவந்து விட, ஒரு பையன் கொடுத்த தண்ணீர் பாட்டிலை வாங்கி தண்ணீர் தெளிக்க, அது மூக்கிலுள்ள ரத்தத்தில் பட்டு முகமெங்கும் வடிகிறது.

**மெர்லின்**
செழியன்!

பெரிதாக அலறுகிறாள்.

சில ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பக்கத்து வகுப்பிலிருந்து ஓடி வருகிறார்கள்.

**1**
What happend?

**2**
என்ன ஆச்சு?

அதற்குள் கண்ணன் (PT Sir) வந்து செழியனைத் தூக்கிக் கொள்ள,

**கண்ணன்**
என்ன ஆச்சு Madam?

**மெர்லின்**
ஆ! லேசா தான் ... லேசாதான் அடிச்சேன்.

**கிருஷ்ணவேணி**
அடிச்சீங்களா ...?

கண்ணன் செழியனைத் தூக்கியபடி வகுப்பைவிட்டு நகர, மெர்லினும் மற்ற ஆசிரியைகளும், 5'B' பிள்ளைகளும் பின்னாடியே ஓட, காலியாகக் கிடந்த அவர்களின் வகுப்பறையில், செழியன் அமர்ந்திருந்த Benchக்கு அடியில் பிந்துவின் கர்சிஃப் கிடக்கிறது.

SCENE 20.

*PT வாத்தியார் கண்ணன் அவசர அவசரமாய் தூக்கிச் செல்ல, யார் யாரோ கேட்கிறார்கள்.*

**1**
தலையில அடிபட்டுறுச்சா?

**2**
First Aid Box வேண்டாமா?

**கண்ணன்**
Hospitalக்கு தான் கூட்டிட்டு போணும்!

Corridorல் நடக்க நடக்க, வெளியே முழங்கால் போட்டிருக்கும் இரண்டு பெரிய வயது மாணவர்களுக்கு நடுவில் இருந்து வந்து, மீனாட்சி சுந்தரம் கேட்பார்

**மீ. சு.**
என்ன ஆச்சு?

விரைவாக அவரைத் தாண்டி ககூ PT Sirம், பிள்ளைகளும் போக, அந்த தமிழ் ஆசிரியை மட்டும் தான் பின்னால் வருகிறார். சட்டென்று பார்த்தால் மெர்லின் தூரத்திலேயே நின்றிருக்கிறாள். தரையை பார்த்தபடி ஏதோ குழப்பமாய் பித்தானவளைப் போல யோசிக்க, பின்னணியில் கண்ணனின் குரல்,

**கண்ணன்**
வேன் டிரைவர் எங்க? யார் இருக்கா?

என்றதும் பித்து நிலையிலிருந்து வெளி வந்தவளாக மீண்டும் முன்னே செல்லும் அந்தக் கூட்டத்தினரை நோக்கி ஓடுகிறாள்.

INTERCUT

வேன் டிரைவர் கோபி, வேனின் பின் சீட்டில் திறந்த வண்ணத்திரையை முகத்திற்கு வைத்து தூங்கிக் கொண்டிருக்க,

INTERCUT

Chemistry Labல் எல்லா மாணவர்களும் Apparatusக்கு அருகருகில் நின்று கொண்டிருக்க, முகத்தில் புடவைத் தலைப்பை வைத்து மூடியபடி கிருஷ்ண வேணி நின்றிருந்தார்.

பாக்கெட்டிலுள்ள போன் அலற அலற Principal பிள்ளைகளிடம் கத்திக் கொண்டிருந்தார்.

**PRINCIPAL**
I will not tolerate indiscipline
ஞாபகம் வைக்சுக்கோங்க!

இதென்ன ஸ்கூலா இல்ல fish marketஆ? என்றபடியே பாக்கெட்டினுள் கையை விட்டு போனை எடுத்து ...

**PRINCIPAL**
ஹலோ! (கோபமாக கத்திப் பேச)
....
which standard?
....

படக்கென்று கிளம்பி நடக்க ஆரம்பிக்கிறார்...

**PRINCIPAL**
எப்படி விழுந்தான்? என்ன ஆச்சு?

....

மெர்லினா ...?

மாடியிலிருந்தே எட்டிப் பார்த்தபடி corridorல் நடக்கிறார்.

**PRINCIPAL**
Why is she going to 5th Standard?
....
Ok! ம் ... மோகன் ... மோகன் ...
மோகனுக்கு கூட்டிட்டுப் போலாம் ...
நான் வரேன் இருங்க ...

கிட்டத்தட்ட நெருங்க ஆரம்பிக்க ... போனை கட் செய்கிறார்.

INTERCUT

**PRINCIPAL**
ராதா சீக்கிரம் வாங்க

போனை கட் செய்வதற்குள், அங்கே மீனாட்சி சுந்தரம் மற்றொரு அறிமுகமில்லாத ஆண் ஆசிரியர் அங்கு வந்து விட்டிருக்கிறார்கள்.

**பத்மாவதி**
Madam! Pulse is coming down!

**ராதா**
கண்ணன்! மோகனுக்கே கூட்டிட்டுப்
போங்க, பத்மா! can you go along?

**கண்ணன்**
Ok  மேடம்.

வண்டி start செய்யப்பட்டு விடுகிறது.

**பத்மா**
Sure! Sure!

**ராதா**
மீனாட்சி Sir! ம் ...! தர்மன் நீங்க போங்க!

தர்மன் அறிமுகமில்லாத மற்றொரு பள்ளி ஊழியர்.

**ராதா**
கண்ணன், கிளம்புங்க ...

Principal பின்னாடியே வருவாரு!

**தர்மன்**
நான் போறேன் மேடம்.

லேசாக நகர்ந்த வேனின் கதவை மீண்டும் திறந்து தர்மன் ஏற வேன் மீண்டும் லேசாக நின்று ஏற்றி விரைகிறது.

**கண்ணன்**
பாத்து ... பாத்து ஏறு ...

INTERCUT

நடந்து வந்து கொண்டிருக்கும் Principal, போனில் யாரோடோ பேசுகிறார்.

**PRINCIPAL**
ஆமா! செழியன். 5'B' address, parent போன் நம்பர் எல்லாம் வேணும் ... சீக்கிரம் ...

வேன் நகர, Principal விரைந்து வந்து கொண்டிருக்கிறார்.

**மீனாட்சி சுந்தரம்**
மா! Don't Mistake me! என்ன ஆச்சு?

பொத்தாம் பொதுவாக எல்லோரையும் பார்த்து கேட்டார். பிள்ளைகளோடு இருந்த அதே அங்கையற்கன்னி பேசினாள்.

**அங்கையற்கன்னி**
மாஸ்டர்! செழியன் நிகிலாவுக்கு Happy birthday சொல்லி உம்மா குடுத்துட்டான் மாஸ்டர்! Miss Sorry கேக்க சொன்னாங்க மாஸ்டர்! அவன் கேக்கல மாஸ்டர்! மிஸ் அவனை அடிச்சு கொன்னுட்டாங்க மாஸ்டர்!

பெரும் அதிர்ச்சியான மெர்லின் கொலை வெறியோடு அங்கயற்கன்னியிடம் வந்து அவளை அறைய கையை ஓங்க, சட்டென்று நிறுத்திக் கொண்டு தான் என்ன செய்கிறோம் என்பதை சற்றே உணர்ந்தவளாய் நடுங்கிய தன் கைகளைப் பார்க்கிறாள். சுற்றிப் பார்க்கையில்,

மயான அமைதியாய் அங்கிருந்த ஆசிரியைகளும், மாணவர்களும் அவளையே உற்றுப் பார்த்தனர். அங்கே பிரின்சிபல்லும் வந்து சேர்ந்திருந்தார்.

கையை மீண்டும் விலக்கிக் கொண்ட மெர்லின் பெருங்குழப்பத்தோடு திரும்புவதற்குள்.

**PRINCIPAL**
What is happening here? Children! Go to your classes!

என்றதும் பிள்ளைகள் அனைவரும் ஓடினார்கள். அங்கையற்கன்னி மட்டும் திரும்பிப் பார்த்தபடி ஓடிக் கொண்டிருந்தாள்.

*பிள்ளைகளுக்குப் பின்பு ஆசிரியர்களும் ஆசிரியைகளுமே மெதுவாக நகர்ந்து செல்ல ஆரம்பிக்க, மெர்லின், மீ.சு., ராதா மட்டும் அங்கு நிற்கிறார்கள்.*

**ராதா**
நீங்க சீக்கிரம் போங்க ... மோகனுக்குத் தான் தூக்கிட்டுப் போயிருக்காங்க ...

லேசான கோபமும் சற்று அக்கறையுடனும் பேசியபடியே காலையில் பார்க் செய்த இடத்துக்கு நடந்து கொண்டிருக்க, பின்னாலேயே ராதாவும் மெர்லினும் நடந்தார்கள். மீனாட்சிசுந்தரம் அங்கிருந்து விலகி வகுப்பை நோக்கி நடந்தார்.

**PRINCIPAL**
என்ன ஆச்சு? What Merlin? கொஞ்சம் Careful ஆ handle பண்ண வேண்டாமா?

**மெர்லின்**
சார் அடிக்கல சார்! லேசாதான் தட்டுனேன் ...

பின்னிருந்து வெகுவிரைவாக ஓடிவந்த மற்றொரு பள்ளி ஊழியர், ஒரு சீட்டினைக் கொடுக்க,

**ஊழியர்**
சார்! செழியன் 5'B' Address, மேடம் குடுக்க சொன்னங்க!

ஊழியர் சென்று விடுகிறார். சீட்டை உற்றுப் பார்க்கிறார் Principal. பையில் வைத்துக்கொண்டு ஹெல்மட் லாக்கை கழற்றியபடி, மெர்லினிடம் சொன்னார்.

**PRINCIPAL**
Alright! You don't worry! நீ சீக்கிரமா வீட்டுக்குக் கிளம்பு! நான் உனக்கு phone பண்றேன்.

**மெர்லின்**
ஏன்? நான் ஏன் போணும்? நான் இப்போ உங்கக்கூட வரேன்.

**PRINCIPAL**
மெர்லின்! நான் சொல்றத கேளு! Call மணிகண்டன்! முடிஞ்சா, ரெண்டு பேரும் two days எங்கியாவது ஊருக்கு கிளம்புங்க!

பேரதிர்ச்சியோடு மெர்லின் PrincipalI ஐப் பார்க்கிறாள்.

**மெர்லின்**
ஏன் சார்? இப்ப என்ன ஆச்சு? அந்த பையனுக்கு நல்லா ஆயிடும் ...

**ராதா**
ஊரை விட்டு எல்லாம் ...

**PRINCIPAL**
Do What I say?

பெரிதாக கத்த, இருவரும் சற்றே அமைதியாக, மிண்டும் நிதானத்துக்கு வந்த principal.

**PRINCIPAL**
இங்கப் பாருங்க! இது எவ்வளவு பெரிய issueஆ வேணாம்லும் ஆகலாம். புரிஞ்சுக்கோ மெர்லின் please do what I say?

**மெர்லின்**
இல்ல! என்ன ஆனாலும் நான் உங்கக்கூட வர்றேன்.

**PRINCIPAL**
மெர்லின், இந்த விஷயத்துல எனக்கு experience இருக்கு! எல்லாத்தையும் நான் பாத்துக்கிறேன். நீ தைரியமா போ.

**மெர்லின்**
Sir...

**PRINCIPAL**
(கோபமாய்க் கத்த....)
மெர்லின்!

**ராதா**
போ! Bagஅ எடுத்துக்கோ ...

Principal வண்டி கிளம்புகிறது. மெர்லின் அழ ஆரம்பித்து, அழுதுக் கொண்டே staff roomஐ நோக்கி நடக்கிறாள். வழி நெடுகிலும், வகுப்புகளின் வாசலில் ஆசிரியர்களும் மாணவர்களும் நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க, மெர்லினின் பின்னால் தூரத்தில் ராதாவும் வருகிறார்.

SCENE 21.

*அழுதபடி Staff - room க்குள் நுழைந்த மெர்லின் தன்னுடைய hand-bag ல், வெளியே காய வைக்கப்பட்டிருக்கும் tiffin box-ஐ எடுத்து வைத்துக்கொண்டுபையை எடுக்க, காலி ஸ்வீட் பாக்ஸ் டப்பா கவிழ்ந்து கீழே விழுந்து விடுகிறது.*

*அதை எடுத்து மூலையில் கிடந்த குப்பைத் தொட்டியில் போட, படக்கென்று அதே மூலையில் சாய்ந்து கொண்டு ‘ஓ’ வென்று அழுகிறாள். சட்டென்று நிறுத்திக்கொண்டு வேகமாக வெளியே நடக்க ஆரம்பிக்கிறாள்.*

SCENE 22.

*5'ஆ' வகுப்பு வாசலில் ராதா டீச்சரும் மற்றொரு தமிழாசிரியையும் நின்று கொண்டிருக்க, கண்களைத் துடைத்தபடி பின்னணியில் மெர்லின் வந்து கொண்டிருக்கிறாள். போனை எடுத்து எதையோ டயல் செய்ய முயற்சிக்கிறாள்.*

**ராதா**
இது தான் அவன் Bag ஆ? Lunch Bag எங்க?

செழியனின் பையைப் பார்க்கிறார்கள்.

**ராதா**
மதியானம் என்ன சாப்பிட்டான்னு தெரியுமா?

தமிழாசிரியை அவன் tiffin box ஐ திறந்து,

**தமிழாசிரியை**
தயிர் சாதம்னு நினைக்கிறேன் Madam,

என்பதற்குள் மெர்லின் வந்தடைகிறாள்.

**ராதா**
எங்க போப்போறே? வீட்டுக்குத்தானே? மணிகண்டனுக்கு Phone பண்ணியா?

**மெர்லின்**
அவர் எடுக்கல ...

செழியனின் பையையும் Lunch bagஐயும் தமிழாசிரியையிடம் கொடுத்துவிட்டு ராதா மெர்லினின் கையை இழுத்தபடி அவசரமாய் நடக்க ஆரம்பிக்கிறார்.

**ராதா**
மெர்லின் ... எதுவும் worry பண்ணிக்காதே! He will be alright... எனக்கு தெரிஞ்சு நீ வீட்டுக்கு கூட போக வேண்டாம். Take மணி! Go to some temple. அவ்வளவு தான். I will keep in touch with you.

you need not feel guilty about this!

மெர்லினுக்கு லேசான அதிர்ச்சியுடன் தலை சுற்றுவதைப் போல் உணர்கிறாள். ராதா லேசாக அவளை உலுக்கியபடி

**ராதா**
மெர்லின்! Are you alright? கூட யாரையாவது அனுப்பவா?

**மெர்லின்**
வேண்டாம்! வேண்டாம்!

என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ராதாவுக்கு ஃபோன் வருகிறது.

**ராதா**
ஆ ... சொல்லுங்க ... இன்னொரு தடவை Dial பண்ணிப்பாருங்க ...

Number errorன்னே வருதா ...
...
சரி நான் திருப்பிப் பாத்துட்டு
சொல்றேன் ...
... பையன் எப்படியிருக்கான் ...
... ம் ...
... ம் ...
... ம் ...
... சரி Ok...

போனை கட் செய்கிறார்.

**ராதா**
சரி நீ போ! Take care! நான் போன்
பண்றேன்

என்றபடி சென்றுவிட மெர்லின் பள்ளியின் வாயிலை நோக்கி காதில் போனை வைத்துக் கொண்ட படியே அவசரஅவசரமாக நடக்கிறாள்.

SCENCE 23.

*ஒரு ரோட்டோரத்தில் விழுந்து கிடந்த லெட்டர்களையெல்லாம் பொறுக்கிக் கொண்டிருந்த ஜெனிஃபருக்கு, உதவியாக ஒரு காக்கி சட்டை போட்ட நபர், சில லெட்டர்களை பொறுக்கிக் கொண்டிருப்பார். பின்புலத்தில் ஆட்டோ நிற்கும். அதனருகில் ஜெனிபரின் சைக்கிள் நிற்கும்.*

*பார்த்தால் அந்த காக்கி சட்டை போட்ட நபர், செழியனின் அம்மா ...*

**ஜெனிபர்**
ஆண்டவர் உனக்கு எந்த குறையும்
வைக்காதிருப்பதாக! உன் கணவன்,
பிள்ளைகள் எல்லோரும் பிணி,
பட்டினியில்லாமல் சுபிட்சித்து
இருப்பதாக ...

SCENE 24.

*வேறொரு புறம், காதில் போனோடு முந்தனையில் வாய் பொத்தி மெர்லின் ஆட்டோவுக்கு கைக்காட்டி நிறுத்திக் கொண்டிருக்க,*
*வெகு தூரத்தில் சாட்டையை வைத்துக் கொண்டு வெற்று உடம்போடும் அருகில் மனைவி பிள்ளையோடும் நடந்து வந்துக் கொண்டிருக்கிறான்.*

SCENE 25.

*ஒரு சாதாரணமான மருத்துவமனையின் வாசலில் இருந்தபடி Principal போன் அடிக்கிறார். பின்புலத்தில் பத்மாவதியும் கண்ணனும் ஏதோ பேசியபடி உள்ளார்கள்.*
*ஆஸ்பத்திரியின் அவசரம் பின்புலத்தில் தெரிகிறது. பின்னணி இசையில் Principal யாரோடு என்ன பேசுகிறார் என்பது தெரியவில்லை.*

*INTERCUT*

*செழியனின் அம்மா அதிர்ச்சியாய் பேசுகிறாள். பின்புலத்தில் சைக்கிளில் ஜெனிஃபர் லெட்டர்களை அடுக்கி வைத்துக்*

*கொண்டே ஒற்றைக் கையால் ஏதோ வாழ்த்துகிறார். நடந்து வந்த செழியனின் அம்மா, ஆட்டோவில் உட்காருகிறார்.*

SCENE 26.

*மீசை மானேஜர் முன்னே அமர்ந்திருந்த மணிகண்டன், சிங், பிரியங்கா, பெயர் அறிமுகமில்லாத மற்றொரு நபர் ஆகியோருக்கு, ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். மணியின் கையில் silent modeல் இருக்கும் phone, 'Bablooo' என்று மிளிர்கிறது.*

**மீசை**
See, the client can talk anything! We are just beggars! என்ன திருவோடு மட்டும் தான் இல்ல ...

அனைவரும் சிரிக்கிறார்கள் ...

**மணிகண்டன்**
Excuse me sir!

**மீசை**
Sure!

SCENE 27.

*வெளியே வந்த மணிகண்டன், போனை எடுக்கிறான். இனி வருபவை Intercut ஆக, மெர்லினுக்கும் செல்லுகிறது.*

**மணிகண்டன்**
(சற்று கோபமாய் )
ஏன் இப்படி பண்ணியிட்டிருக்க?
கூப்பிட்றேன்னு சொன்னேன்ல ...?

INTERCUT

மெர்லின் எதுவும் பேசாமல், சத்தமில்லாமல் அழுகிறாள் - trafficல் நிற்கும் ஆட்டோவில் உட்கார்ந்து இருக்க, சாட்டையை வைத்துக் கொண்டு தன்னைத்தானே அடித்துப் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான். அந்த சத்தமும் மேளசத்தமும் மேலோங்கி இருக்க, அவள் என்ன பேசுகிறாள் என்பது யாருக்கும் கேட்காமல் போனது. அவளுக்கு மணி என்ன பதில் கூறிக் கொண்டிருந்தான் என்பது வருமாறு.

**மணிகண்டன்**
ஹலோ! ஹலோ!
என்ன ஆச்சு ...
ஏய்! ஏன் அழற ...?
ம் ...
ம் ...
ம் ...
மயங்கி தானே விழுந்தான் ...
ம் ...
ஓ ...
எந்த Hospital?
சரி இப்போ நீ எங்க இருக்க?
பையனோட Parents வந்துட்டாங்களா?

INTERCUT

ஆட்டோ trafficஐ விட்டு நகர்ந்திருக்க,

**மெர்லின்**
இல்ல! அந்த பையனுக்கு அப்பா இல்ல
...

**மணிகண்டன்**
அம்மா ...!

**மெர்லின்**
இருக்காங்க ... ஆட்டோ டிரைவர்.

இரைச்சலில் மணிக்கு கேட்கவில்லை

**மணிகண்டன்**
ம்?

**மெர்லின்**
ஆட்டோ டிரைவர்

என்று கத்தி சொல்ல, ஆட்டோவை ஓட்டிக் கொண்டிருக்கும் டிரைவர் திரும்பி மெர்லினை முறைத்துப் பார்க்கிறார்.

**மணிகண்டன்**
சரி! நீ நேரா வீட்டுக்குப் போ! நான் Hospitalல்ல பாத்துட்டு வரேன்! எந்த Hospital?

அதற்குள் மணிகண்டனின் அருகில் சிங்கும் பிரியங்காவும் நின்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**மணிகண்டன்**
மோகன் ... ஏய்! மெர்லி! நீ வீட்டுக்குப் போக வேண்டாம்! நீ உங்க churchக்குப் போ! ம்! நான் hospitalக்கு போயிட்டு வந்து உன்னை கூப்பிடுக்கிறேன்.

SCENE 28. MONTAGES

*(1) பைக்கில் மணிகண்டன் ஏற, சிங், தான் ஓட்டுவதாக சொல்லி மணிகண்டனை பின்னுக்குத் தள்ளிவிட்டு சிங் உட்காருகிறான்.*

*(2) Traffic நிறைந்த காலையில் சற்றே வேகமாக சிங்கும் மணிகண்டனும் வந்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*(3) வழியில் கடக்க முற்படும் ஒரு வயதான பெண்மணியை சற்று நிறுத்தி, அவரைக் கடக்க விட்டு விட்டு பின்பு வேகமாகிக் கொள்கிறது வண்டி.*

*(4) ஒரு சிறிய மருத்துவமனை வளாகத்திற்குள் நுழைகிறது இவர்களின் வண்டி.*

SCENE 29.

*காலில் fracture கட்டுடன் ஒரு 30 வயது மதிக்கத் தக்க ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் கண்ணனையும் பத்மாவதியையும் கடக்க, அவர் பேசினார்.*

**கால் கட்டு உள்ளவர்**
வா கண்ணா! இங்க எங்க ...!

**கண்ணன்**
பழநி! இன்னா கால்ல?

**கால் கட்டு உள்ளவர்**
அது ankle twist வுடு! நீ இன்னா ...?

பின்புலத்தில் Principal யாரோ போனில் பேசிக் கொண்டிருக்க, மணியும் சிங்கும் வந்து விடுகிறார்கள்.

**கண்ணன்**
அது ஒன்னும் இல்லப்பா! School பையன் ஒருத்தன் ... கீழே வூந்துட்டான்!

INTERCUT

Principalம் மணிகண்டனும் பேச ஆரம்பிக்க பின்னணியில் கண்ணனும் பழனியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**PRINCIPAL**
மணிகண்டன்! நீங்க எதுக்கு வந்தீங்க ...? மெர்லின் எங்க?

**மணிகண்டன்**
That's Ok Sir!! பையன் எப்படி இருக்கான்?

**PRINCIPAL**
அதை நான் பாத்துக்குறேன்னு சொன்னேன்! I made it very clear to her! Where is she?

**மணிகண்டன்**
அவ Churchல இருக்கா சார்! OK! பையனுக்கு எப்படி இருக்கு?

Principal மணியை இழுத்துக் கொண்டு சற்று காற்றும் வெளிச்சமும் வரும் corridor பகுதிக்கு அழைத்து வந்து விடுகிறார்.

**PRINCIPAL**
மணி! இங்க பாருங்க ... பையனுக்கு தலையில அடிபட்டு இருக்கு! மூக்குல ரத்தம் வந்திருக்கு ...

**மணிகண்டன்**
சார்! மெர்லின் ...

**PRINCIPAL**
I know! I know! மெர்லின் இதை வேணும்னே செய்யல! I know her! But இது எவ்வளவு பெருசானாலும் ஆகலாம். You just keep away.

**மணிகண்டன்**
இல்ல! இல்ல! We can face! என்ன பிரச்சினையானாலும் நான்

பாத்துக்குறேன்.

**PRINCIPAL**

(கடுங்கோபமாய் மாறுகிறது
அவர் முகம் ...கத்துகிறார்)
என்ன எந்த பிரச்சினையானாலும் நீங்க பாத்துக்குவீங்க...? பையனுக்கு அப்பா கிடையாது. அம்மா ஆட்டோ டிரைவர். இன்னும் பத்து நிமிஷத்துல, நூறு பேர் சேந்தாலும் ஆச்சரியப்படறதுக்கில்ல ... Everything will be come personal! He is a child! யாருக்கு வேணாலும் கோபம் வரும்! உங்களை தூக்கிப் போட்டு அடிப்பாங்க! பரவாயில்லியா?

**மணி**

பரவாயில்ல சார்!

அங்கு கண்ணனும் பத்மாவதியும் வந்து விட, மீண்டும் மணிகண்டனின் கையை இழுத்துக் கொண்டு அவனை பேசவிடாமல், வாசலுக்கே வந்துவிடுகிறார்.

**PRINCIPAL**

Listen! I can handle this officially! நீங்க வீட்டுல கூட இருக்காதீங்க ...! முடிஞ்சா, எதாவது வெளியூர்க்குப் போயிடுங்க! வேணுங்கிறப்போ நானே கூப்பிடுவேன்!

**PRINCIPAL**

இருங்க!

தன்னுடைய சட்டைப்பையில் இருந்து கொத்தான cardஐ எடுக்க, அதிலிருந்து ஒரு cardஐ எடுக்கிறார்.

அதே நேரத்தில் தலையில் அடித்தபடி ஒரு பெரியம்மா தன்னை கடப்பதைப் பார்க்கிறான், மணிகண்டன்.

கார்டை மணிகண்டனிடம் கொடுக்கிறார்.

**PRINCIPAL**

இது என் friendடோட resort! கொல்லிமலைல இருக்கு! நான் அவனுக்கு call பண்ணி சொல்லிடுறேன்! கிளம்புங்க ...

**மணி**

சார்! பையன் ... எவ்வளவு செலவானாலும் நான் பாத்துக்குறேன் சார் ...! Sir Take care...

மணிகண்டனைத் தள்ளிவிட, கண்ணன் மேற்கொண்டு மணிகண்டனை அழைத்துச் செல்கிறார்.

கண்ணன் மணிகண்டனை இழுத்துச் செல்ல, சிங் பின்னால் அவனைத் தள்ளிக் கொண்டு செல்கிறார்கள்.

Principal போவென்று சைகைக் காட்டுகிறார். வற்புறுத்தலின் பேரால் வேறு வழியின்றி திக்கித் திக்கி நடக்கிறான், மணிகண்டன்.

SCENE 30.

*ஒரு ஆட்டோ மருத்துவமனை வளாகத்திற்குள் நுழைய டிரைவர் சீட்டில் செழியனின் அம்மா. வந்த ஆட்டோ நேரடியாக வாசல்வரை வந்துவிட, உள்ளிருந்து ஒருவர் வெளியே எட்டி மருத்துவமனையை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே கீழிறங்க, பின்புலத்தில், மணிகண்டன் பின்னமர்ந்து கொண்டு மருத்துவமனையைப் பார்க்க, சிங் வண்டியை ஓட்டிக் கொண்டு செல்கிறான்.*

*செழியனின் அம்மாவோடு வந்திறங்கிய மனிதர் உதயன்.*

SCENE 31.

*oxygen மாஸ்க்கோடு செழியனின் ஒரு கையில் trips ஏறிக் கொண்டிருக்க, மற்றொரு கையில் pressure பார்த்துக் கொண்டிருக்கிறார் ஒரு நர்ஸ்.*
*ஒரு பெரிய டாக்டர், மற்றொரு பெண் டாக்டரிடம் சொன்னார்.*

**பெரிய டாக்டர்**
இன்னொரு 2 minutes பாருங்க!
(லேசான பெருமூச்சுடன்)
pulse increase ஆகலைன்னா ... call them inside. கூப்பிடு சொல்லிடுங்க ... It is a serious case.

பெண் டாக்டர், ஒரு விதமான disappointment look கொடுக்கிறார்.

SCENE 32.

*உள்ளே நுழைந்த செழியனின் அம்மாவும் உதயனும், அவசர அவசரமாய் வர, வழியில் பத்மாவதி டீச்சர், செழியனின் அம்மாவை பிடித்துக் கொள்கிறார்.*
*லேசான சலனத்தைத் தவிர வேறெதையும் காட்டாத, அழுது விடாதவளாய் கேட்டாள்.*

**செழியனின் அம்மா**
செழியன் எங்க?

**பத்மாவதி**
Doctors பாத்துகிட்டு இருக்காங்க ...

தூரத்தில் நின்று கொண்டிருந்த Principal சற்று உற்று நோக்கி வந்தவர்களைப் புரிந்து கொள்வதற்குள் உதயன் மெதுவாக நடந்து Principal ஐ நோக்கி வர ஆரம்பித்தான். அருகில் சுவரில் சாய்ந்து நின்றிருந்த கண்ணன் நேராக நின்றான். மெதுவாக நடந்து வந்த உதயன், பிரன்சிபல்லிடம்,

**உதயன்**
நீங்க தான் Principal ஆ ...

**PRINCIPAL**
ஆமா ... நீங்க ...?

**உதயன்**
(கண்ணாடியைக் கழற்றிக் கொண்டு)
சே ... செழியன் என் தங்கச்சி பையன்.

**PRINCIPAL**
Actually, ...

**உதயன்**
அந்த teacher எங்க?

SCENE 33.

*ஒரு சர்ச்சின் vehicle Parking ல், ஒரு காருக்கும் பைக்கும் நடுவே பைக்கில் சாய்ந்தபடி நின்றிருக்கிறாள் மெர்லின். அந்த சர்சுக்குள்ளே ஏதோ திருமணம் ஒன்று நடந்து கொண்டிருக்க, அதன் சத்தம் மட்டும் வெளியே கேட்டுக் கொண்டிருக்கிறது.*

"அல்லேலூயா, துதி மகிமை!
அல்லேலூயா, துதி மகிமை!"

என்று ஒரு பாடல் முடிய, போதகரின் குரல் ஒலிக்கிறது;

**போதகரின் குரல்** (V.O)
"இவன் இவளுக்கென்றும், இவள் இவனுக்கென்றும் நானே நிச்சயிக்கிறேன்; மனுஷரால் இது கூடாதது என்னும் தேவனாலே மட்டுமே எல்லாம் கூடும்!"

அழுது முகம் வெளிறிப் போயிருந்த அவள், நின்றிருக்கும் பைக்கின் கண்ணாடியை எதேர்ச்சையாக பார்க்க, அதில் சர்ச்சின் மீதிருந்த சிலுவை தெரிகிறது. மேலும், அந்த கண்ணாடியில் ""objects seen in mirror are closer than they appear'''' என்ற வாசமும் தெரிகிறது. மற்றொரு கண்ணாடியில் தன்னுடைய முகம் தெரிய, பார்க்கப் பிடிக்காமல் திரும்பிக் கொண்டவள், திடீரென்று திரும்பி, அதைப் பார்த்தாள். தலை வகிட்டில் கிடந்த குங்குமத்தை கவனித்து, அவள் முகம் லேசாக கலங்கியது.

தன் கைகள் தன்னையும் அறியாமல் அதைத் துடைக்க வர, கண்ணை மூடிக்கொண்டு அதை அழித்தாள்.

சட்டென்று கிளம்பி, நெற்றியை தேய்த்துக் கொண்டே நடந்தாள். அருகிலிருந்த ஒரு குழாய் வரிசையின் ஒரு குழாயில், அழுதுகொண்டே முகத்தைக் கழுவினாள்.

SCENE 34.

*வார்டின் வாசலில் Principal ம் உதயனும் ஏதோ விவாதத்தில் இருக்கிறார்கள்.*

**PRINCIPAL**
She is newly married! சின்னப் பொண்ணு! லேசாதான் தட்டியிருக்காங்க ...! எனக்கு அவங்களை நல்லா தெரியும் ...

பெண் டாக்டர் வெளியே வந்துவிட, சட்டென்று எல்லோரின் கவனமும் அவரிடம் திரும்பி அவரை நோக்கி பதற்றமாய் நடந்தார்கள்.

**பெண் டாக்டர்**
செழியன் ... Parents இருக்கீங்களா?

செழியனின் தாய் முந்தி முன்னே உள்ள வர, உதயன் அவளை பின்னுக்குத் தள்ளி முன்னுக்கு செல்கிறான். அருகில் பிரின்சிபாலும் நிற்க,

**பெண் டாக்டர்**
உள்ளே வாங்க ...!

உள்ளே சென்றதும்,

**பெண் டாக்டர்**
நீங்க ...?

**உதயன்**
(கோபமாய்)
விஷயத்தை சொல்லுங்க!

பெண் டாக்டர், சற்று முழித்தவராய்,

**பெண் டாக்டர்**
Pulse rate ரொம்ப poor ஆயிடுச்சு! கஷ்டந்தான்! நீங்க வேணா, Children Hospital, இல்லன்னா Apollo ல்ல try பண்ணலாம்!

**உதயன்**
(ஓங்கிக் கத்த)
இவ்வளவு நேரம் என்னப் பண்ணீங்க?

**PRINCIPAL**
Ambulance arrange பண்ணமுடியுமா?

தலையை ஆட்டிய பெண் டாக்டர் Landline போனில் கை வைக்க,

**PRINCIPAL**
கண்ணன்!

என்று கத்தியபடியே வெளியே செல்கிறார்.

SCENE 35. MONTAGES

*1. உதயனும் தர்மனும் இரண்டு வார்டு பாய்களும் Stretcherல் தள்ளியபடி வார்டில் இருந்து செழியனைத் தள்ளிக் கொண்டு வெளியே வர தன்னைக் கடந்து சென்ற Stretcher ஐக் கூட கவனிக்காமல், டமாலென்று தரையில் உட்கார்ந்து பித்து பிடித்தவளைப் போல் பார்க்க ஆரம்பிக்கிறாள். Stretcher ஐ தள்ளிக் கொண்டு வந்த உதயன் அவளை பிடிக்கப் போக, Stretcher வாசலை நோக்கி விரைகிறது.*

*2. ஆம்புலன்ஸ் விரைய, கண்ணன் பிரின்சிபாலோடு பிரின்சிபல் பைக்கில் தொடர்கிறான். அதன் பின்னால் ஒரு ஆட்டோவும் செல்ல, ஆட்டோவை ஓட்டுவது உதயன். பின்னால் செழியனின் அம்மா, பித்து பிடித்தவளாய் இருக்கிறாள்.*

*3. இருட்ட ஆரம்பித்து இருந்த ரோட்டில், ஆம்புலன்ஸும் பைக்கும் ஆட்டோவும் விரைதல்.*

*4. போனில் யாருடனோ Principal மாறி மாறி பேசிக் கொண்டே வருகிறார்.*

*5. ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குள் வேன் நுழைகிறது.*

SCENE 36.

*சர்ச்சில், வெளிறிய ஈரமான முகத்துடன் மெர்லின் நின்றிருக்க, ஒரு கை அவள் தோளைத் தள்ள, திரும்பிப் பார்த்தால், அங்கே மணிகண்டனும், சிங்கும் இருக்கிறார்கள்.*

*மணிகண்டனை வெறித்துப் பார்த்த மெர்லின் தலைகுனிந்து கொள்ள, கதறுகிறாள். மீண்டும் மணிகண்டனைப் பார்த்து அழுது கொண்டே அணைத்துக் கொள்கிறாள். பின்னணியில் சர்ச்சில் பாடும் திருமண கீதம் கேட்கிறது.*

SCENE 37.

*பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு கைத்தேர்ந்த மருத்துவர் ஒருவர் ஒரு ராணுவ அதிகாரியைப் போன்ற மிடுக்குடனும், ஞானம் தெறிக்கும் முகத்துடனும், ஒரு Operation theatreல் இருந்து வெளியே நடந்து வர, அவர் பின் இரண்டு டாக்டர்களும் ஓடி வருகிறார்கள்.*

*நடந்து கொண்டே அவர் பேசியது*

**டாக்டர் (தன்பத் ஜெயின்)**
How was it?

**பின்னே வந்தவர்**
Miraculous!

**DR. தன்பத்**
What is miraculous ya? It is science! See, the moral of the story is talk with confidence! நீங்க மனுஷங்க இல்ல! புரியுதா?

தன் கழுத்திலிருந்த Sthethescope ஐ கழற்றி பின்னால் வந்தவரின் கழுத்தில் போட்டு ... அவர் முகத்தைப் பார்த்து சொன்னார்.

**DR. த. ஜெயின்**
You are the God! Angel! Saviour!

பச்சா க்ஙா ஹே? (பையன் எங்க இருக்கான்...)

கேட்டபடி வந்து நின்ற ஒரு வாசலுக்குள் செல்ல, தூரத்தில் Principal லும், உதயனும் தெரியும்படி நின்றிருந்தார்கள்.

SCENE 38.

*பிரியங்கா, மணிகண்டனின் ஆஃபிஸில் இருந்து கடணிணுல் சிங்கிடமும், மணிகண்டனிடமும் பேசுகிறாள்.*

**பிரியங்கா**
தூ மணி கோ தேதோ நா (மணிகிட்ட போனை கொடேன்.)

INTERCUT

மணியும், சிங்கும், மெர்லினும் நின்றிருக்க, சிங், போனை

மணியிடம் கொடுக்கிறான்.

**பிரியங்கா**
இங்க பார்! அவங்க சேலத்துல தான் இருக்காங்க! கொல்லிமலை, just an hour journey from salem. t's such a quiet and safe place.. புரியுதா? எங்க சித்தி Phone number, address எல்லாம் message பண்றேன். எதாவது help ன்னா OK? Take Care!

**மணி**
இதுக்கு எதுக்கு அவ்வளவு தூரம் ....?

**பிரியங்கா**
அதுக்காகன்னு எதுக்கு நினைக்கிற? Just take a trip! அவளுக்கு comfortable ஆ இருக்கும்ல!

**மணி**
ம்!

**பிரியங்கா**
I am with Mr. Kappoor! address அ message அனுப்புறேன்! Take it! Don't worry! எல்லாம் சரியாயிடும்!

SCENE 39.

*Dr. தன்பத் ஜெயின் Principal லுடனும், உதயனுடனும் பேச, பின்னால் கண்ணன் நிற்கிறார்.*

**DR. தன்பத் ஜெயின்**
நீங்க School Principal. நீங்க?

**உதயன்**
செழியனுடைய மாமா ...

**DR. தன்பத் ஜெயின்**
Child's Uncle....?! நீங்க ...?

**கண்ணன்**
School PT Master...

**DR. தன்பத் ஜெயின்**
Out!

வெளியே போகச் சொல்லி சைகை செய்கிறார். பதிலேதும் சொல்லாமல் கண்ணன் வெளியே செல்ல,

**DR. தன்பத் ஜெயின்**
பாருங்க! பையனோட தலையில ரத்தம் கட்டிருக்கு! There is a servere block in his cerebellum!

Further ஆ எப்படி Proceed பண்ணும்னு 'MRI'க்கு அப்புறம் தான் சொல்ல முடியும்! சர்ஜரி பண்ண வேண்டியிருக்கலாம்! or a slight higher end treatment would be

required!

எதுவான்னாலும் decide பண்றதுக்கு
கொஞ்சம் டைம் வேணும்!

**உதயன்**
பையனுக்கு சரியாயிடுமா? எனக்கு
புரியற மாதிரி சொல்லுங்க!

அமைதியாக உற்று பார்த்துவிட்டு Dr. சொன்னார்.

**DR. தன்பத் ஜெயின்**
கை, கால் விளங்காம போலாம்; Coma
stage க்கும் போலாம்; எதுவும்
இல்லாம முழுசா உயிரும்
பிழைக்கலாம்;

I am confident!

Wait பண்ணுங்க ...

என்றபடி கையை வெளியே போகும்படி காண்பித்து சைகை
செய்கிறார்! அவர்கள் வெளியேற தன்னுடைய Intercomm ல்,

**DR.**
Doctor! I need the boy at scanning
floor! quick! Right Now!

வெளியே வந்த Principal, உதயனிடம் ...

**PRINCIPAL**
நல்ல Doctor! கவலைப்படாதீங்க ...!

உதயன் வேறொரு பக்கம் திரும்பி எதையோ யோசிக்கிறான்.

SCENE 40.

*5’B’ வகுப்பில் ஒரு ஆயா பெருக்கிக் கொண்டிருக்க, வெளியே
பெருக்கிக் கொண்டிருக்கும் மற்றொரு துப்புறவு
தொழிலாளியிடம் பேச்சுக் கொடுக்கிறார். (Indistinct
Conversation)*

**பெண்**
எங்கெருந்து தான் இத்தினி
பேப்பர்ங்களை கீச்சி கீச்சி
போடுங்களோ! சாமி! அஞ்சாங்
கிளாஸ் நாலாங் கிளாஸ்தான்பா
இப்பிடிக்கிது!....

... ஏய்! வேலு! இந்த கிளாஸ்ல
தானே ஒரு பையன் மயக்கம்டி அடிச்சி
கீழே ஊந்துடுச்சி!

**வேலு**
அப்பவேதான் ஆஸ்பிட்டலுக்கு
தூக்கினுபுட்டாங்களே இன்னா!

**பெண்**
மயக்க அடிச்சி வுழுவுற அளவுக்காப்பா
அடிக்கும்? இன்னா டீச்சருங்களோ!

இன்னா பசங்களோ?

என்றபடி செழியனின் ரப்பர் பேண்டுகள் வேய்த தகர டப்பாவை எடுத்து மேசை மேல் வைக்கிறார்.

இதுவரை நடந்தவை அனைத்திலும் தகர டப்பா மட்டும் focus ஸிலும் மற்றவை out of focus ஸிலும் இருக்கும். அதன் அருகில் காய்ந்த ஒரு சொட்டு ரத்தம் கிடக்கிறது.

**பெண்**

ஏதோ ஒன்னு டப்பாவை வுட்டுட்டு
போயிட்டுக்குது! அப்புறம் நம்மளை
கேப்பாங்க! டப்பாவை பாத்தியா
அவங்க அப்பாவை பாத்தியானு ...

SCENE 41.

*கோயம்பேடு பஸ் ஸ்டாண்டில் வந்து நின்ற சேலம் பஸ்ஸை பெருங்கூட்டம் ஒன்று மொய்த்தெடுக்க, ஏற முற்பட்டிருந்த மெர்லினும் மணிகண்டனும் அவசர அவசரமாய் போய் ஸீட்டை பிடித்து உட்கார்ந்து கொள்கிறார்கள். உட்கார்ந்துவிட்ட மெர்லின் பயந்து எல்லோரையும் பார்த்துக் கொள்கிறாள். மேலும் கீழுமாய் அங்கு நடப்பவை ஒவ்வொன்றையும், தன்னுடைய தவறாக உணர்வதைப் போல், பயந்து பயந்து கவனிக்கிறாள். தன்னுடைய Hand bagல் இருந்து phoneஐ எடுத்து அடிக்க, அருகிலிருந்த மணிகண்டனுக்கு ஒரு phone அடிக்கிறது. Phone ஐ எடுத்த மணி, phone ஐ பார்த்துவிட்டு மெர்லினைப் பார்க்க, மெர்லினும் உணர்ந்தவளாய் 'கட்' செய்கிறாள். மீண்டும் போனை டயல் பண்ண பண்ண, 'engaged' tone கேட்கிறது.*

**மணிகண்டன்**

யாருக்கு?

சற்று அமைதிக்குப் பிறகு மெல்லியக் குரலில், காதில் போனை வைத்துக் கொண்டே ...

**மெர்லின்**

Principal

SCENE 42.

*பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. பரணிதரன் போனில் Principal-லோடு பேசிக் கொண்டிருக்கிறார். ஒரு கூலிங் கிளாஸ்ஸோடு ரோட்டோரமாக காரை நிறுத்திக் கொண்டு, ஒரு பிளேட் தந்தூரியும் மிண்டுமாக இருந்த plate ஐ வைத்து சாப்பிட்டுக் கொண்டே கூறுகிறார்.*

**திரு. பரணி**

இங்க பாருங்க uncle! வேணும்னு
செஞ்சாங்க வேணாம்னு
செஞ்சாங்கன்னுல்லாம் நான் கேக்கல!
பையனை எப்படியாவது
காப்பாத்துங்க! எவ்வளவு
செலவானாலும் பரவாயில்ல! And fire
the teacher immediately!

இன்னும் half an hourல ... mail
பண்ணுங்க! fax பண்ணுங்க! ஏதோ
ஒன்னு ...! I should sign it
immediately.

INTERCUT

Principal ஆஸ்பத்திரி வாசலில் நின்று பேசிக் கொண்டிருக்கிறார்.

**PRINCIPAL**
இல்ல ! அதுல அவசரப்பட வேணாம்னு நினைக்கிறேன்!

**திரு. பரணி**
Irritate பண்ணாதீங்க uncle!

சொல்றத செய்ங்க! Worst Come Worst two weeksக்கு suspend பண்ணுங்க! I mean it. Hello! Hello!

INTERCUT

பிரின்சிபல் அமைதியாக இருக்க

**திரு. பரணி**
uncle, Lineல இருக்கீங்களா? முக்கியமா, Mediaக்கு தெரியாம பாத்துக்கங்க! அப்புறம் வந்துடாவனுங்க மைக்கையும் காமிராவையும் தூக்கிக்கிட்டு ...

SCENE 43. MONTAGES

1. ஒரு வீடு தட்டப்பட, அந்தக் கதவைத் திறந்ததும் அதிலிருந்து ராதா வெளியே வர மைக்குடனும் காமிராவுடனும் மூன்று பேர், உள்ளே நுழைந்து, பின் குரல்கள் கேட்கின்றன.

**அ**
பிரன்சிபல் Sir இருக்கறரா? எந்த Hospitalக்கு போயிருக்காங்க ...?

2. மற்றொரு வீட்டு வாசலில் ஒரு பெண்மணி

**பெண்மணி**
சார் இல்லியே ...!

என்று சொல்லி முடிப்பதற்குள் உள்ளே நுழைந்த பிரஸ்காரர்கள், அங்கே மீ.சு. வைப் பார்க்கிறார்கள்.

**மீ.சு.**
ஹலோ! Don't mistake me! எனக்கு ஒன்னும் தெரியாது.

**குரல்**
அந்த டீச்சர் பேரு என்ன? அவங்க எங்க இருக்காங்க!

3. அங்கயற்கன்னி எதையோ பேசப் பேச, Sofa Setல் உட்கார்ந்திரந்த ஒரு நபர், notes எடுக்க, முன்னணியில் காஃபி தம்ளர் இருக்கிறது. நிகிலாவுக்கு அருகே, அவர் அம்மா சௌகர்யமாக உட்கார்ந்து இருக்கிறார்.

4. ஆஸ்பிட்டல் வளாகத்திற்குள் நுழைந்து கண்ணனிடம் பேச, அவர் எதையும் சொல்லாமல் மறுத்து நடக்கிறார். நடந்த

பாதையின் ஒரு பக்கத்தில் மற்றொரு பிரஸ்காரரிடமும் எதையோ விளக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார் பத்மாவதி.

5. செழியனின் அம்மாவிடம் சில மைக்குகளும் காமிரவும் வர, அதைத் தடுத்த உதயன்,

**உதயன்**
காமிராவை Off பண்ணுங்க.

SCENE 44.

*ஒரு சிறிய ஓட்டலில் Coffee டம்ளரை முன்னாடி வைத்துக் கொண்டு ஒரு tablet ஐப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டு காபியை அப்படியே வைத்துவிட்டு தண்ணீரைக் குடிக்கிறார் Principal.. கையில் செல்ஃபோன்.*

**PRINCIPAL**
ஹலோ! எங்கம்மா இருக்க...?

INTERCUT

பஸ் போய் கொண்டு இருக்கிறது.

**மெர்லின்**
(கண்ணை மூடிக் கரைகிறாள்)
சொல்லுங்க சார்.

**PRINCIPAL**
பையனை BRJ Hospital கொண்டு வந்தாச்சும்மா ...

**மெர்லின்**
அவனுக்கு சரியாயிடுச்சா? என்ன சொல்றாங்க....?

**PRINCIPAL**
ம் ...! He will alright! நீ எங்க இருக்கீங்க ...

**மெர்லின்**
எங்கெங்கயோ போயிட்டிருக்கோம் சார்.

மீண்டும் அழுகிறாள். போனை வாங்கி மணிகண்டன் பேசுகிறான்.

**மணிகண்டன்**
சார்! பையனுக்கு என்ன சொல்றாங்க ...

**PRINCIPAL**
இதபாருங்க! நல்ல Doctor தான் பாத்துட்டு இருக்காரு! He should be alright! அதை நான் பாத்துக்குறேன்.

School trustee பரணி சார் பேசுனாரு! Merlin may be suspended! நீங்க தான் அவளுக்கு ஆறுதல் சொல்லணும்!

**மணிகண்டன்**
சார்! Suspension ஆகுற அளவுக்கு ...

போனை மெர்லின் பிடுங்கிக் கொண்டு படபடவென்று, பேசுகிறாள்

**மெர்லின்**
சார்! எனக்கு வேலையே போனாலும்
பராவியல்ல! பையனை காப்பாத்துங்க
சார்! ப்ளீஸ்!

மீண்டும் அழுகிறாள். போன் மணிகண்டனுக்குப் போக ....

**PRINCIPAL**
மணிகண்டன்! press நாலா பக்கமும்
பிச்சுப் பிடுங்கிகிட்டு இருக்காங்க! என்
வீட்டுக்கே போயிருக்காங்க! நீங்க
இப்போ எங்க இருக்கீங்க?

**மணிகண்டன்**
கொல்லிமலைக்கு தான் போயிட்டு
இருக்கோம்.

**PRINCIPAL**
ம்! என் friendகிட்ட பேசிட்டேன்!
நீங்களும் ஒரு தடவை பேசிடுங்க ...
Be safe! முடிஞ்ச வரைக்கும் Police
issue ஆகாம பாக்குறேன்! நானே
உங்களுக்கு call பண்றேன்
மணிகண்டன்.

**மணிகண்டன்**
ம் ...!
... ok!
.... ok!
... நான் பாத்துக்குறேன் சார்!
Thankyou Sir! என் நம்பர் இருக்குல்ல!
ஹலோ ...!

அவர் போனை வைக்க, காதிலிருந்து போனை எடுத்த படி மணிகண்டன் கேட்டான்.

**மணிகண்டன்**
சார்கிட்ட என் நம்பர் இருக்குல்ல!

கண்களைத் துடைத்தபடி இருக்கும் என்று தலையை அசைக்கிறாள்.

பஸ் வேகமாக சென்னையை விட்டு போய்க் கொண்டிருந்தது.

பிரன்சிபல் போனை வைத்துவிட்டு பாக்கெட்டிலிருந்த பத்து ரூபாயை பில் தட்டில் வைக்க பக்கத்திலிருந்த போன் "கண்ணன் P.E.T.'' என்று மிளிர்கிறது.

போனை எடுத்தவர் எழுந்து, நடந்துக் கொண்டே பேசினார்.

**PRINCIPAL**
சொல்லுங்க கண்ணன்! Press,
hospitalக்கும் வந்துச்சா ...?

கண்ணன் எதுவும் பேசும் முன்பே கேட்கிறார்.

**PRINCIPAL**

ம் ...
ம் ...
ம்... நான் பாத்துக்குறேன்!
யாரு என்ன பேசுனாலும், கேட்டாலும்,
கோபப்படாதீங்க ... புரியுதா?
தப்பு நம்ம பக்கம் இருக்கு, கண்ணன்!
பொறுமையா இருங்க!
ம்! கொஞ்சம் வேலையை முடிச்சுட்டு
வந்திர்றேன்! பாத்துக்கோங்க!

SCENE 45.

*செழியனின் classmate பிந்துவின் வீடு. பின்னணியில் டீவியில், ஏதோ சீரியல் ஓடிக் கொண்டிருக்க table light போட்டு பிந்து home work நோட்டை பிரித்து வைத்தபடி எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.*

*வாயில் வைத்து பல தடவை கடிக்கப்பட்ட பென்சில் வாய்க்குள் சிறிய எரிச்சலை ஏற்படுத்தியிருக்க, தூ! தூ! என்று துப்பினாள். மீண்டும் ஏதோ சிந்தனைக்குள் ஆழ்ந்தவள் தன்னை அறியாமல் மீண்டும் பென்சிலை வாய்க்குக் கொண்டு போக, ஒரு கை பட்டென்று வாயிலேயே அடிக்கிறது. அது அவன் அம்மாவின் கை.*

**பிந்துவின் அம்மாவின் குரல்**

பிந்து! வாய்ல இருந்து பென்சிலை
எடு! பாத்துண்டே இரேன்! காலையில
ஆய்ல பென்சில் பென்சிலா வரப்
போறது!

லேசாக அழுவதைப் போல் முகத்தை வைத்து ...

**பிந்து**

ம்மா! Lunch periodல என் கர்சிஃப்
தொலைஞ்சு போச்சும்மா! ...
அப்புறம், (கீழிறந்த தன் Bag எடுத்து)
Last Periodல water குடிச்சேன்னா!

அப்போ ... Last bench க்குக் கீழ
கிடந்ததும்மா!

என்றபடி Bagலிருந்து, அந்த கர்சிஃபை வெளியே எடுத்து, அதைப் பிரிக்க, அங்கங்கு சிவப்புக்கறை!

**பிந்து**

ஒரே Blood ம்மா! யாரோட Blood
ம்மா இது ...?

SCENE 46.

*ஒரு ஆங்கில செய்தி TV Channel ல் ஸ்டூடியோவுக்குள் ஒரு சிறிய discussion க்காக தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். பேசுவதற்கென்று இருவர், வந்திருக்க, அவரைப் பேட்டி எடுத்தபடி செய்தி வாசிக்க வென்று செய்தி வாசிப்பாளர் (**அஜித்**) உள்ளே நுழைகிறார்.*

*முழு கோட்சூட் போட்டிருக்கும் அஜித், அமர்ந்திருந்த ஒரு கிராப்*

*வெட்டிய பெண்மணிக்கும், மற்றொரு தலை பழுத்த நபருக்கும் கை கொடுக்கிறார்.*

**அஜித்**
Hello! Ajitson Samuel!

**பெண்**
Raichel Singh, Child Development Authority.

**ஆண்**
ஆறு படை வீடு! இளைஞர் மற்றும் குழந்தைகள் பாசறை

**அஜித்**
Oh! Thank you so much for coming to the studio!

காமிராவைப் பார்த்து,

**அஜித்**
Biju! Position OK?

கையை வைத்தே விசிறிக் கொண்டு

**அஜித்**
... Can you raise the fanspeedயா ... ம் ...

அலுத்துக் கொள்கிறார்.

**பின்னே ஒரு எகோ குரல்**
Ajit! Short time! Can we rush?

அஜித் திடீரென்று shotக்கு ரெடியாகிறான்.

**CAMERA**
Order OK! போலாம்! போலாம்! Let' go!

**DIR**
Roll

**CAMERA**
Rolling

**DIR**
Ya Ajit!

**அஜித்**
Welcome to the special bulletin on "To Beat or Not to Beat''. A 10 year old kid of the Chennai city school has been slapped late this afternoon by his teacher and has fell unconsious. The child being hospitalized the teacher is found missing. On disciplining the child, the policy is a question. the policy is to beat or not to beat. Is the

corporal punishment the day's problem?

We now have Ms. Raichel Singh from child Development Authority and Mr.Arupadai Veddu from Ilaingnar Mattrum Kuzhandhaigal Paosorai.

**DIR**

Cut! Take OK!

**அஜித்**

போலாம்! போலாம்! Breaks!

**DIR**

OK Va? Run through ...

**அஜித்**

OK! OK!

**DIR**

Sir! Madam; இவரோட Shots மட்டும்! stay cool!

**CAMERA**

Order

**DIR**

Roll

**CAMERA**

Rolling

**DIR**

Ya! Ajit

**அஜித்**

We will hear more from Mr. Arupadai Veedu on the child rights laid in the constitution of India and how much are the schools adhering to it!

Soon after the break! Stay tuned!

**DIR**

Cut

------- இடைவேளை -------

SCENE 47.

*பஸ் தூரத்தில் போய்க் கொண்டிருக்க, பஸ்ஸுக்குள் நிறைய பேர் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மணிகண்டனின் தோளில் மெர்லின் சாய்ந்திருக்க, அவர்களுக்கு மேலுள்ள ஒரு லைட் மட்டும் எரிந்து கொண்டிருக்கிறது.*

*மெர்லின் மணிகண்டனின் தோளில் சாய்ந்தபடி இருக்கையில், சற்று அருகில் எதிர்வரிசையில் ஒரு சிறுவன் அவளையே*

*முறைத்து பார்த்துக்கொண்டிருந்தான். அவன் உற்று பார்க்க பார்க்க ஏதோ ஒரு வினோத பயத்துடன் மெர்லின் பார்க்க, அவன் எழுந்து வருகிறான்.*

*அருகில் வந்து கேட்கிறான்.*

**சிறுவன்**
கொன்னுட்டல்ல?

அவன் அப்படி கேட்டதும் பட்டென்று அவன் மூக்கில் இருந்து ரத்தம் வடிகிறது.

அருகில் இருந்த மணிகண்டன் எதுவும் புரியாமல் குழம்ப , அந்த சிறுவன் அப்படியே மணிகண்டனின் மடியிலும் சீட்டிலும் காலை வைத்து ஏறி, மெர்லின் மண்டையிலேயே தட்ட தட்ட மணிகண்டனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

**சிறுவன்**
(அழுத படி)
கொன்னுட்டா!
கொன்னுட்டா!கொன்னுட்டா!

மேலும் மேலும் அடிக்க, அவள் தலையை குனிந்த படி வாங்க, திடீரென்று பார்த்தால் யாரும் அடிக்கவும் இல்லை. அந்த பையனும் இல்லை.

SCENE 48.

*டாக்டர் தன்பத் ஜெயினுக்கு முன்னால் கண்ணனும் உதயனும் உட்கார்ந்து இருக்கிறார்கள்.*

**DR.**
Where is Mr.. தணிகாச்சலம்

**கண்ணன்**
ம் ... Principal Sir வெளிய போயிருக்காரு. சொல்லுங்க ...

**உதயன்**
என்கிட்ட சொல்லுங்க ...

டாக்டர் அமைதியாக எதுவும் சொல்லாமல் உதயனையே வெறிக்கிறார். பிறகு

**DR.**
The Child has entered the coma stage.

உதயன் புரியாத தொனியில் டாக்டரைப் பார்க்க,

**DR.**
பையன் Coma Stage க்கு போயிட்டான் ...
... ம் ... There is a possibility

நான் ஏற்கனவே neuro-surgeon கிட்ட பேசிட்டேன். டாக்டர் ராஜேந்திரவர்மன்! City's one of the best! Luckly நாளைக்கு freeya இருக்கிறாரு.

உங்களுக்கு OK ன்னா நாளைக்கு
காலைல 7.30க்கு சர்ஜரி!

இருவரையும் பார்க்கிறார்.

**உதயன்**
இன்னைக்கே முடியாதா?

**DR.**
No! அவ்வளவு அவசரப்பட
தேவையில்ல! 10 hours operation.
பொறுமையா தான் ...

அவர் முடிப்பதற்குள்,

**உதயன்**
செய்ங்க! செய்ங்க! எவ்வளவு பணம்
ஆனாலும் பரவாயில்ல ...

என்றபடி எழுந்துக் கொள்கிறான். திரும்பி வெளியே வருகிறான்.

பின்புலத்தில் Doctor ம் கண்ணனும் indistinct ஆகப் பேசிக் கொள்கிறார்கள்.

**கண்ணன்**
ஒன்னும் பயமில்லையே சார் ...

**DOCTOR**
Hopefully! உங்க Principal எப்போ
வருவாரு?

அவருக்கு ஏதோ Phone வருகிறது.

தலையை குனிந்தபடி வெளியே நடக்கிறான், உதயன்.

INTERCUT

flashback - செழியன் ஒரு ஆற்றிலோ, கிணற்றிலா - ஏதோ ஒரு நீர்நிலையில் மூச்சு முட்ட முட்ட நீச்சல் அடிக்க கைக்கால்களை உதறுகிறான். அவனை தாங்கியபடி உதயன் கத்துகிறான். மூச்சு மூட்ட வாயைத் திறந்து ஆசுவாசப்பட்டு கொள்கிறான் செழியன்.

**உதயன்**
அடி! அடி! காலை உதறுடா! சும்மா!
அடி!

**செழியன்**
(மூச்சுத் திணறுகிறான்)
மாமா! மாமா!

**உதயன்**
(சிரிப்புடன் )
நல்லா அடிறா ... உசுறா
போவப்போது?

INTERCUT

flashback முடிய, தலை குனிந்து நிற்கிறான் உதயன். Doctor ரூமிலிருந்து வெளியே கண்ணன் வர, தலைகுனிந்திருந்த

உதயன் நிமிர்கிறான்.

**உதயன்**
அந்த teacher வந்துட்டாங்களா?

**கண்ணன்**
சார், அவங்க பாவம் வேணும்னே
எதுவும் செய்யல ...

சொல்லிமுடிக்கும் முன்பே,

**உதயன்**
அப்புறம் எங்கடா போனாங்க

பெருங்கூச்சலிடுகிறான். அறைகிறான். வாங்கிய அறைக்கு பதிலேதும் சொல்லாமல் கண்ணன் கைகளை இறுகக் கட்டியப்படி நிற்கிறான்.

SCENE 49.

*மெர்லின் மணிகண்டனின் வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ நிற்க, காலையில் தெருவோர கார் இடித்த சண்டையில் தாத்தோவோடு ஆஸ்பத்திரிக்கு போன அதே பையன்,*

**பையன்**
ண்ணா! இதான்னா 9/18

நாய்கள் குரைத்துக் கொண்டிருக்க, உதயன் கேட்டைத் திறக்க, உள்ளிருந்த பெண் மடித்துக் கொண்டிருந்த துணியோடு வெளியே வர.

**பெண்**
யாரு? யாரு வேணுங்க?

**உதயன்**
மெர்லின் இருக்காங்களா?

**பெண்**
அப்படி யாரும் இங்க இல்லையே ...
எங்க வேலை பாக்குறாங்க?

**உதயன்**
ஸ்கூல்ல teacherஆ வேலை
பாக்குறாங்க. வீட்டுக்காராரு
மணிகண்டன். Artic Engineering ல
வேலை பாக்குறாரு!

**பெண்**
புதுசா கல்யாணம் ஆனவங்களா? ...
ம்! ஆமா! மாடி வீடு! அவங்க இன்னும்
வரலியே!

அவள் சொல்லி முடிப்பதற்குள், மேலே கோபமாக ஏறுகிறான்.

**பெண்ணின் குரல்**
ம்! ஏங்க! ஹலோ! ன்ன? சொல்ல
சொல்ல போயிட்டே இருக்காரு.

மேலே ஏறியவன், தெரு விளக்கின் வெளிச்சத்தில் வீடு பூட்டியிருப்பதைப் பார்த்து, அதை இழுத்து விட்டு, கதவைத்

தோளால் கோபமாக இடிக்கிறான்.

**பின்னே ஒரு ஆண் குரல்** (V.O)
யாருப்பா அது? ஆளில்லாத வீட்டுல
என்ன பண்றீங்க?

**பெண் குரல்**
சொல்ல சொல்ல மேல போறாருங்க
...

SCENE 50.

*உதயன், வேறெதோ வீட்டின் மாடியில் ஏற, ஒரு கிறிஸ்துவ வழிபாட்டுப் பாடலை, நான்கைந்து பேர் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.*

*உள்ளே பார்த்தால், ஒரு கணவன் - மனைவி - குழந்தை மற்றும் ஜெனிஃபர்.*

**ஜெனிஃபர்**
இறைவா, இந்த பிள்ளைகளை உமது
பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.
சோபியாவின் அலுவலகத்தில் எந்த
குறையும் இல்லாமல் அவளுடைய
மானேஜர்களின் கோபங்கள்
அடங்குமாறும், மகன் பர்னபாஸின்
உடல் நிலையில் யாதொரு
சீக்குமின்றி, அவன் பல் வலியை
குணப்படுத்துமாறும் மற்றும்
இவர்களின் குழந்தை, செல்வன்
ஆல்பர்டுக்கும் சிறந்த கல்வி
கிட்டுமாறும், பணியுங்கள்
ஆண்டவரே!

கண்களை மூடி பேசியபடி இருந்ததால் உதயன் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. எதற்கோ இடையில் கண் திறந்து கவனித்துவிட்ட ஜெனிஃபர், உதயனை பார்த்து எதையும் கண்டுகொள்ளாமல் மீண்டும் வழிபாட்டில் ஐக்கியமடைய அவர்களை எந்த தொந்தரவும் செய்யாமல் கைகளைக் கட்டிக் கொண்டு அமைதியாய் நின்றான். சிகரட்டை எடுத்து வாயில் வைத்தவன் மீண்டும் அவர்களைப் பார்த்துவிட்டு உள்ளே வைத்துக் கொண்டான்.

**பெண்**
ரொம்ப தாங்கஸ் ஆண்டி!

நொண்டியபடி கணவன் முன்னே நடக்க, குழந்தையைத் தூக்கியபடி பெண் பின்னே செல்கிறாள். அவர்கள் இறங்கியதும், வழியனுப்ப வந்திருந்த ஜெனிஃபரைத் தாண்டி விறுவிறுவென உள்ளே உதயன் நுழைய, ஜெனிஃபர் திகைத்தாள்.

**ஜெனிஃபர்**
Praise the Lord! சொல்லுங்க brother

**உதயன்**
மெர்லின் இருக்காங்களா?

**ஜெனிஃபர்**
இல்ல பிரதர்! நீங்க யாரு?

**உதயன்**
மெர்லின் உள்ள தான் இருக்காங்களா?

**ஜெனிஃபர்**
அவ இங்க இல்லீங்க! அவளைத் தேடி இங்க வராதீங்க ...

**உதயன்**
சரி! அவங்களுக்கு ஒரு போன் போடுங்க!

**ஜெனிஃபர்**
அதெல்லாம் முடியாது ... உங்களுக்கு என்ன வேணும்?

**உதயன்**
சரி! நம்பரை குடுங்க! நான் பேசிக்கிறேன்.

**ஜெனிஃபர்**
நீங்க யாருங்க! உங்ககிட்ட ஏன் என் பொண்ணோட phone நம்பர் குடுக்கணும்?

**உதயன்**
(சற்று சத்தமாக)
ம்மா! ஒன்னு Phone போடுங்க! இல்ல நம்பரை குடுங்க! உங்க பொண்ணால ஒரு பிரச்சினை. ஸ்கூல்ல எங்க பையனை அடிச்சு, அவன் இப்போ ஆஸ்பத்திரியில இருக்கான். ரொம்ப பொறுமையா பேசிக்கிட்டு இருக்கேன். நான் அப்படிப்பட்ட ஆளில்ல! நம்பர் குடுங்க.

ஜெனிபர் டயல் செய்து விட்டு ...

**ஜெனிஃபர்**
Phone Switch Off ஆகியிருக்கு ...

**உதயன்**
என்ன drama ஆடுறீங்களா? நம்பரை குடுங்க ...

**ஜெனிஃபர்**
நீங்க கிளம்புங்க பிரதர்! நான் Policeஅ கூப்பிட வேண்டியது இருக்கும்!

**உதயன்**
கூப்பிடுங்க! Police ம் அவங்களை தேடிக்கிட்டுத்தான் இருக்கு!

**ஜெனிஃபர்**
(அதிர்ச்சியாக அவனைப் பார்த்துவிட்டு)
நீங்க போங்க பிரதர்! அவ போன் பண்ணா நானே கூட்டிட்டு வரேன்! எந்த பிரச்சினைக்காகவும் ஓடி ஒளியறவங்க இல்ல நாங்க ...

உதயன் தலையை குனிந்து பின்பு ஜெனிஃபர் முகத்தைப் பார்த்து ...

**உதயன்**
நாங்களும் ஒரு கன்னத்துல அறைஞ்சா மறு கன்னத்தை காட்டுறவங்க இல்ல ...!

SCENE 51.

*ஒரு கதவு திறக்க, வெளியில் இருந்த பிரின்சிபல் வீட்டினுள் நுழைகிறார். கதவைத் திறந்த அவர் மனைவி ராதா உள்ளே சென்று கொண்டே பேசுகிறார்.*

**ராதா**
பையன் எப்படி இருக்கான்? டாக்டர் என்ன சொல்றாரு?

கதவை உள்ளிருந்து சாத்திய படி Principal பேசினார்.

**PRINCIPAL**
இப்போ தான் கண்ணன் போன் போனாரு! He has entered the coma stage.

கையில் ஏதோ ஒரு hand bag வந்த ராதா அதிர்ச்சியாய் வாயில் கையை வைத்து Principal முன் நின்றார்.

**PRINCIPAL**
நாளைக்கு காலைல 7.30க்கு சர்ஜரி!

**ராதா**
பையன் பிழைச்சிடுவான்னு நம்பிக்கை இருக்கு! இந்தாங்க! இதுல 50,000 cash cover க்குள்ள வைச்சிருக்கேன். ATM Card, Pass Book ல்லாம் Side Zip ல வைச்சிருக்கேன்!

பையைக் கொடுக்கிறார் ராதா. உள்ளே சென்று கொண்டே

**ராதா**
கஞ்சி போட்டுடேன்! மாத்திரை போட்டுடுங்களா? எதற்கும் பதில் கொடுக்காமல் அமைதியாக சற்று அலுத்து போனதைப் போல் தலை குனிந்து நிற்க,

**ராதா**
என்னங்க ஆச்சு?

அவரை பிடித்தபடி, என்னங்க ஆச்சு? அக்கறையாய் விசாரிக்க...

**PRINCIPAL**
பாதியிலேயே எடுக்குறதுக்கு எதுக்கும்மா குடுக்குறான் ஆண்டவன்! குடுக்காமலே இருக்கலாம்ல.

ராதா Principal ஐ அணைத்துக் கொள்கிறார். ஒரு விதமான சோகத்துடன், முகத்தை வைத்துக் கொண்டு,

**ராதா**
ஒன்னும் ஆகாதுங்க! வாங்க,
மாத்திரையை போட்டுட்டு கஞ்சியை
குடிங்க! Bike இருக்கட்டும்!
போவும்போது taxi ல போயிக்கலாம்!
(PRINCIPAL முகத்தைப் பார்த்து)
மெர்லின் போன் பண்ணாளா? நான்
Phone பண்ணேன். Switch off
ஆகியிருந்தது. எங்க இருக்கா?

கதவு தட்டப்படுகிறது. யாராயிருக்கும் என்ற முகப்பாவத்துடன் கதவைத் திறக்க, அது உதயன்.

உதயன் ராதாவைத் தாண்டிக் கொண்டு உள்ளே வர,

**PRINCIPAL**
வாங்க!

பிரின்சிபல் முடிப்பதற்குள்,

**உதயன்**
டீச்சரை எங்க வைச்சிருக்கீங்க?
இன்னும் 1 மணி நேரத்துல வரலனா,
FIR file பண்ணுவேன்!

**PRINCIPAL**
வேணும்னுமே செய்யல சார்! இது ஒரு
accident...

**உதயன்**
accident தான்! பாதிக்கப்பட்ட நான்
தானே தெருவுல கத்தறேன்? எங்க
புள்ளதானே சாவ கிடக்குது? accident
க்கு காரணமான Party மிஸ்ஸிங்
தானே? இப்போ வரணும்! தப்பை சரி
பண்ண தப்பு செஞ்சவங்களே தான்
வரணும்! அப்போ தான்
உங்களுக்கெல்லாம் பயம் இருக்கும்!
திருப்பி Accident நடக்காது!

பேசிக்கொண்டிருக்கும் போதே திரும்பி நடந்து போகிறார் Principal.

**உதயன்**
மார்க் வாங்கணும், ஸ்கூல் நல்ல பேர்
எடுக்கணும்னு பிள்ளைங்களை கண்ணு
மண்ணு தெரியாம அடிப்பீங்க ...
உங்க வியாபாரத்துக்கு எங்க
பிள்ளைங்கதான் கிடைச்சாங்களா?

எத்தனையோ அயோக்கியனுங்க ஆத்து
மணலை அள்ளிட்டுப் போய் விக்கல
... கஞ்சா கடத்தல ... ஏன்! Beer
Factory கட்டு! ஒயின் ஷாப்
காண்ட்ராக்ட் எடு! எதுக்குய்யா ஸ்கூல்
நடத்துறீங்க ...

ஏன்யா ... உங்களை நம்பிதானய்யா
பிள்ளைங்களை அனுப்புறோம்.
இப்படியா கண்ணுமண்ணு தெரியாம

அடிக்கிறது? உங்களுக்கெல்லாம்
பிள்ளைங்க இல்ல ...?

Principal திரும்பியபடி குலுங்கி அழுகிறார்.

**ராதா**

இல்ல தம்பி! பிள்ளைங்க இல்ல! நாலு வருஷத்துக்கு முன்னாடி தான் எங்க பொண்ணு Bike accident ல செத்துப் போச்சு!

நாலு நாள் ... வாழ்வா? சாவா? வாழ்வா? சாவான்னு Hospital ல்லயே கிடந்துச்சு பிள்ளை ...

லாரி ஏறி ஒரு கை, ஒரு கால் போயிடுச்சு. இந்த Left side full ஆ ...

ஒத்தை கை ஒத்தை காலோடயாவது அவ எப்படியாவது உயிரோட இருந்துரனும்னு ஆசைபட்டோம்! ரொம்ப செலவு பண்ணோம்!
(தலையை அசைத்தபடி)
மாட்டேன்ட்டா!

உங்களுக்கு இருக்கிற பிள்ளையோட அருமை தான் தெரியும்! எங்களுக்கு இல்லாம போச்சுன்னா வர்ற வலி தெரியும்! போங்க தம்பி! விட்ற மாட்டோம்!

கண்ணீர் மல்க smile செய்கிறார். உதயன் உற்று அமைதியாக பார்க்கிறான், பதிலேதும் பேசாமல் நடந்து விடுகிறான்

SCENE 52.

*ஒரு போலீஸ் ஜீப்பில் mufti உடையில் (கீழே மட்டும் காக்கி பேண்ட்) இருந்த பெண் போலீஸ் அதிகாரி போனில் பேசிக் கொண்டே ஏறுகிறார்.*

**பெண் போலீஸ்**

அதான்ங்க! DC சொன்னாரு! அதனால தான் இப்படி பேசுகிட்டிருக்கேன் உன்கிட்ட!

வண்டியை எடுக்கும்படி சைகை காண்பிக்கிறார்.

**பெண் போலீஸ்**

எவனாவது ஒருத்தன் கம்ப்ளயின்ட் பண்ற வரைக்கும் வாயை பொளந்துகிட்டு இருக்கிறதா போலீஸ்?

நாங்க alert ஆவறதுக்குள்ள அந்த பொண்ணை வரச் சொல்லுங்க!

INTERCUT

மணிகண்டனின் மீசை மானேஜர்

**மீசை**
மேடம்! தெரிஞ்சு பண்ணலீங்க மேடம்! பாவம்! இப்போ தான் கல்யாணம் ஆச்சு! யதேர்ச்சையா தட்டியிருக்காங்க! பையன் கீழ விழுந்துட்டான்.

**பெண் போலீஸ்**
ம்! ரோட்டோரமா நின்னு ஐஸ்கிரீம் சாப்பிட்டுட்டு இருக்குற உங்க பையனை ஏதோ ஒரு லாரிக்காரன் அடிச்சுடான்!

பரவாயில்ல போப்பான்னு விட்டுறுவீங்களா ...

INTERCUT

அமைதியாக இருக்கிறார் மீசை மானேஜர்.

**பெண் போலீஸ்**
என்ன சத்தத்தை காணும்? ... ம்! பொண்ணு எனக்கு கால்மணி நேரத்துல Phone பண்ணனும் ...!

SCENE 53.

*Fan ஓடிக் கொண்டிருப்பது அருகிலிருந்த செம்பில் தெரிய பிந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பின்னணியில் சாய் பாபா பாட்டு ஓடிக் கொண்டிருக்கிறது.*

*முன்புலத்தில் அவளின் அப்பா - அம்மா இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்ததால் தட்டுகளும் ஊறுகாய் பாட்டிலும் இருக்க, தட்டில் மோர் சாதமும் மாவடும் இருக்கின்றன.*

**அம்மாவின் குரல்**
கிளாஸ்ல இருக்கிறவாள்ளாம் விட்டுட்டு உங்க பொண்ணுக்கு தான் இப்படியெல்லாம் நடக்கும்! ... அந்த பையனுக்கு கூடக்குறைய ஆச்சுன்னா போலீஸ் கேஸாகும்ல! ... பிந்துவை தானே போட்டு குடைவா ...

பிந்து தூக்கம் கலைய லேசாக அசைகிறாள். அப்பாவின் கை அம்மாவை எதுவும் பேசாதே என்பது போல் சைகை செய்கிறது. பிந்து மீண்டும் அயர்கிறாள்.

SCENE 54.

*மணிகண்டன் கையிலிருக்கும் Phone Switch off ஆகிறது. ஒரு ஏமாற்றமும் எரிச்சலுமான முகத்தோடு மணிகண்டன் மெர்லினைப் பார்க்க, அந்த பக்கம் conductor கடக்கிறார்.*

**மெர்லின்**
சாப்பிட எப்பங்க நிறுத்துவீங்க?

திரும்பிப் பார்க்காமல் பேசியபடி செல்கிறார் கண்டக்டர்.

**கண்டக்டர்**
தோ வந்துடுச்சும்மா! கால் மணி நேரம் ...

**மெர்லின்**
யார் கிட்டயாவது Phone கேக்கலாமா?

மணிகண்டன் வேண்டாமென்பது போல் தலையாட்டி மெர்லினை ஒரு கையில் அணைக்கிறான்.

SCENE 55.

*ஒரு தாபா. இறங்கிய மெர்லினும் மணிகண்டனும் PCO விற்கு அருகில் இருக்கிறார்கள். பின்புலத்தில், "நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் ரெண்டு" என்று பாடல் ஒலிக்கிறது.*

*ஒரு போன் பூத்துக்குள் மெர்லின் பிரின்சிபல்லுக்கு try செய்ய செய்ய, லைன் கிடைக்கவில்லை.*

*வேறொரு பெண்மணி உள்ளே சென்று வந்துவிட, மீண்டும் try செய்யும் மெர்லினுக்கு லைன் கிடைத்துவிடுகிறது. அவள் பேச பேச, வெளியிலிருந்து மணிகண்டன் பார்க்கிறான். அழுதபடி வெளியே வருபவள்,*

**மெர்லின்**
அந்த பையன் கோமா ஸ்டேஜுக்கு போயிட்டானாம். அவன் கூடயாவது இருந்திருப்பேன்ல!

அருகில் கண்டக்டர் இலையை கொண்டு வந்து வெளியில் போடுகிறார். கை கழுவுகிறார்.

**மணி**
இரு! என் Manager கிட்ட பேசிட்டு வந்துர்றேன்! இங்கயே இரு!

பஸ்ஸை Driver ஏறி எடுக்கிறார். தூரத்தில் இருந்தபடி மெர்லின் அதைப் பார்த்துக் கொண்டிருந்த மெர்லின் பதற்றமாக PCO கதவைத் தட்டி திறக்க, மணிகண்டன் பொறுமையாக இருக்கச் சொல்லி கையைக் காட்டுகிறான்.

மெர்லின் கதவை மூடிவிட்டு கைகளைக் கட்டிக் கொள்கிறாள். கதவை மணி திறந்து அமைதியாக வந்து நிற்கிறான்.

**மெர்லின்**
பஸ் கிளம்புது ..

**மணி**
நம்ம திரும்பி Cheenai க்குப் போணும்!

எதுவும் பேசாமல் மெர்லின் முழிக்கிறாள்.

**மணி**
கவலை படாத! தெரிச போலீஸ் officer தான்.

Phoneல் பேசுகிறான்.

INTERCUT

**பெண் போலீஸ்**
ஹலோ! நீங்க ...?
... ம் சொல்லுங்க ... எங்க உங்க
wife இல்லியா?

INTERCUT

மணியிடம் போனை மெதுவாக வாங்கிப் பேசுகிறாள் மெர்லின்.

**மெர்லின்**
Madam...

**பெண் போலீஸ்**
என்னம்மா? பிரச்சினை ஆயிடுச்சா
...? நான் ஒரு கிரிமினலை
அடிக்கிறதுக்கும் நீங்க ஒரு Studentஅ
அடிக்கிறதுக்கும் வித்தியாசம்
வேணாம்மாமா ...!

ஒரு சிறுவன் கராத்தே Dress ஸோடு பின்சீட்டில் ஏறி,
பின்னிலிருந்து பெண் போலீஸிற்கு முத்தம் கொடுத்து விட்டு
Water bottle ல் இருந்து தண்ணீரை உறிய, வண்டிகிளம்புகிறது.

**பெண் போலீஸ்**
நாங்க திருட்டுப்பயல்களை
திருத்தணும்! நீங்க பிள்ளைங்களை
வளர்க்கணும்மா!

INTERCUT

**மெர்லின்**
ம்!

அமைதியாக அழுகிறாள்.

**பெண் போலீஸ் குரல்**
ப்ச்! அழாதே ... உங்க வீட்டுக்காரரு
கிட்ட குடு!

மணிகண்டன் வாங்கிக் கொண்டு

**மணிகண்டன்**
மேடம்! வந்தவாசித் தாண்டி
போயிட்டிருக்கோம் மேடம்!

INTERCUT

**பெண் போலீஸ்**
அடுத்த Bus சென்னைக்கு எப்போன்னு
பாத்து விடியறதுக்குள்ள இங்க
இருக்கணும்!
worry பண்ணாதீங்க! பாத்துக்கலாம்
...

**மணிகண்டன்**

OK Madam! Sure Madam! Thank you!

பெண் போலீஸ் போனை கட் செய்து பின்னால் திரும்பாமலேயே
மகனிடம் பேச்சு கொடுக்கிறார்.

**பெண் போலீஸ்**
என்ன தம்பி! நைட் என்ன
சாப்பிடுறீங்க ...?

மெர்லின் அழுதபடி பூத்தை விட்டு வெளியே வருகிறாள். ஒரே ஒரு திருவண்ணாமலை பஸ்ஸைத் தவிர, வேறு எந்த பஸ்ஸூம் அங்கு இல்லை. ஏதோ ஒரு சின்ன யானையும், லாரியும் மட்டும் அங்கு நின்றிருக்கிறது.

திடீரென்று மெர்லின் தூரத்திலிருந்த லாரியை நோக்கி நடக்கிறாள். மணி பின்னாலேயே ஓடி வருகிறான்.

**மணிகண்டன்**
மெர்லின்! ஏ! மெர்லின்! எங்கப்
போற?

லாரியில் ஏறி உட்கார்ந்திருந்த டிரைவர், accelerator ஐ திருப்பி உருமிக் கொண்டிருக்க,

**மெர்லின்**
ன்னா! சென்னை போகுதா? சரியாக
காதில் கேட்காமல் மீண்டும் லாரி
டிரைவர் கேட்கிறான்.

**டிரைவர்**
ம்!

**மெர்லின்**
சென்னை போறீங்களா ...?

அருகில் வந்துவிட்ட மணி,

**மணி**
ஏ! என்னப் பண்ற! பஸ்ல போலாமே
...!

குழப்புமும் கோபமுமாய் மணி கேட்கிறான்.

SCENE 56.

*லாரியின் பின்புற சிறிய கதவைத் திறந்து ஒரு பழைய பாட்டில் ஒன்று நுழைய, அதை மெர்லினைத் தாண்டி வாங்கிக் கொள்கிறார் லாரி டிரைவர்.*

**டிரைவர்**
நம்ம வண்டி தெருப்புர் நாலு ரோட்டுல
பிரிஞ்சுடும். பயப்படாதீங்க... பதமா
விட்டுட்டு போறேன்.

கோபமாய் உட்கார்ந்திருக்கிறான் மணிகண்டன்.

**டிரைவர்**
எதாவது பிரச்சனையா?

**மணி**
தெரிஞ்சவங்களுக்கு கொஞ்சம் உடம்பு
சரியில்லீங்க ...

சற்றே அமைதிக்குப் பிறகு,

**மெர்லின்**

இல்லீங்க! நான் ஒரு டீச்சர்! ஸ்கூல்ல
ஒரு பையனை அடிச்சுட்டேன்! அவன்
மயக்கம் போட்டு கீழே விழுந்துட்டான்!

சற்று அமைதிக்குப் பிறகு,

உதட்டைப் பிதுக்கி அழுதபடி கீழே குனிகிறாள் மெர்லின். லாரி சற்று நேரத்தில் ஓரங்கட்டப்படுகிறது. இருட்டான இடத்தில் ஏதோ ஒரு மங்கலான வெளிச்சத்தில், மெர்லினும் மணிகண்டனும் பேசிக் கொள்கிறார்கள்.

**மணி**

யாரு என்னன்னு தெரியுமா? சொல்ல
சொல்ல ஏறிகிட்டு இருக்க! இப்போ
எங்க போனான்னு கூட தெரியல!
எல்லாத்துலயும் அவசரம்! பதட்டம்!
அதனாலதான் இங்க நிக்கிறோம் ...

சத்தம் மெலிதாய் வர ஏங்கி அழுகிறாள் மெர்லின். டிரைவர் உள்ளே ஏறுகிறார். மெர்லின் கண்களை துடைத்துக் கொள்ள டிரைவர் இரண்டு பிஸ்கட் பாக்கெட்டுகளையும் சில வாட்டர் பாக்கெட்டுகளையும் அங்கே வைக்கிறார்.

**டிரைவர்**

சாப்பிடுங்க ...

வண்டியின் கிளம்பும் அசைவுக்கு லேசாக மணி ஆடுகிறான்.

பின்னணியில் வாயிலிருந்த பீடியை கீழே போட்டுவிட்டு டிரைவர் வண்டியை எடுக்கிறார். கண்ணாடிக்கு மேலே ஒரு சிறிய லைட் எரிய அதற்குக்கீழ்,

நான் வருகையிலும் உன்னோடு இருக்கிறேன் போகையிலும் உன்னோடு இருக்கிறேன்   அத் : 26 : 2

என்ற வாசகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் மெர்லின்.

SCENE 57.

*ஒரு Coffee shop ல் ஒரு இளம் பெண்ணும் ஆணும் பேசிக் கொள்கிறார்கள்.*

*மேலிருந்து முகத்திற்கு நேராக மின் விளக்கு தொங்க, ஒரு கொட்டாவியுடன் பேச ஆரம்பிக்கிறாள் அந்த இளம் பெண்.*

**இளம் பெண்**

(கொட்டாவி)

ஆ ...!

அந்த ஸ்கூல் பையனை அடிச்ச ஸ்டோர் ...
கண்ணாடியை அவிழ்த்து இரு உள்ளங்கைகளாலும் கண்களை கலக்கிக் கொண்டு பேசுகிறாள்.

**இளம் பெண்**

நான், எப்படி அடிச்சாங்க ... எங்க
அடிச்சாங்க ... யார்
அடிச்சாங்கல்லாம் கிடையாது ... ஏன்
அடிச்சாங்க? அதான் நம்ம story!

**இளம் பெண்**

(கண்ணடித்து)

எப்படியோ லைனை புடிச்சுட்டோம்ல! அந்த 5th Standard பையன் ஒரு பொன்னை Kiss பண்ணிருக்கான். அதுக்கு அடிச்சிருக்காங்க ...

இளைஞன் tissue பேப்பரை எடுத்துக் கொண்டு, கைகளை துடைத்தபடி பேசுகிறான்.

**இளைஞன்**

ம் ... But this is too much ya!

இதுக்கெல்லாம் பையனை அடிக்காம என்ன பண்றது! அது தெரியாம பட்டு பெருசாயிடுச்சுன்னா நீங்க பத்திரிக்கையில் போட்டு கிழிக்கிறீங்க!

**இளம்பெண்**

ஹலோ! 5th Standard பையனுக்கு என்ன தெரியும்? Birthday ன்னு வந்த பொன்னை Kiss பண்ணியிருக்கான். It is just a way of expression! அவங்க வீட்டுல அது சாதாரணமான விஷயமா கூட இருக்கலாம் ... பிரச்சனை அவன்கிட்ட இல்ல! இந்த மாதிரி issuesஅ handle பண்ண தெரியாம அடிச்சு வைக்கிற டீச்சர்கிட்டதான் இருக்கு!

**இளைஞன்**

5th standard பையனுக்கு என்ன தெரியும்னுலாம் சொல்லாதே! you won't believe! பசங்கல்லாம் 5th லயே pornography பாக்குறாங்க!

2nd 3rd லயே மாமா மச்சினு பேசிக்கிறாங்க!

**இளம்பெண்**

True! பசங்க கண்ணாடி மாதிரி! அவங்களை சுத்தி நடக்கிற விஷயத்தை தான் Reflect பண்ணுவாங்க! பத்திரிக்கை, டீவி, சினிமா எல்லாத்துலயும் இன்னிக்கு Semi - Poronography இருக்கு! பொறக்கும் போதே வாடா மச்சின்னு பொறக்கறாங்க ...! நீங்கல்லாம் பேசுறீங்க ... அவங்க திருப்பி பேசுறாங்க! It is very natural!

**இளைஞன்**

அப்போ அப்படியே விட்டுறாலாமா? பசங்களுக்கு discipline லாம் வேண்டாமா?

**இளம்பெண்**

See! discipline வேணும்! இந்த சினிமா, Internet, பத்திரிக்கை எல்லாத்துகிட்ட இருந்தும்

பிள்ளைங்களை காப்பாத்தித் தான் ஆகணும்! Aravind! ஊர் பூரா முள்ளு அசிங்கம் எல்லாம் இருக்கதான் செய்யும்!

ஒன்னு ஒன்னா போய் Remove பண்ண முடியாது! உன் கால்ல செருப்பு மட்டும் தான் போட்டுக்க முடியும்!

**இளைஞன்**
அப்போ என்ன தான் பண்ணணுங்கிற?

**இளம்பெண்**
அதை டீச்சர்ஸ் தான் யோசிக்கனும். என்னை மாதிரி Journalistஒ, உன்னை மாதிரி IT professional யோ பெருசா ஒன்னும் பண்ண முடியாது!

இதான் நம்ம story நாளைக்கு! பையனோட அம்மாகிட்ட மட்டும் ரெண்டு Bytes வாங்கிட்டேன்னா super hit!

**இளைஞன்**
I love you!!

SCENE 58.

*லாரி வேகமாய் கடந்து சென்று கொண்டிருக்கிறது.*

**டிரைவர்**
அந்த நாலு ரோட்டுல விடறேன்! ரெண்டு மணிக்கு மேல சென்னைக்கு நிறைய பஸ் வரும்!

அதுவரைக்கும் ஒரு லாட்ஜ் காட்டுறேன்! அங்க இருந்துக்கோங்க! ஒன்னும் பிரச்சினை இல்ல! நல்ல lodge தான்.

என்னப்பா?

மணியை கேட்கிறான்.

**மணி**
(தலையை ஆட்டி)
சரிங்க!

வண்டி நாலு ரோட்டில் நிற்க தூரத்தில் lodge ஐ காட்ட, கீழே மணியும் மெர்லினும் நின்றிருந்தார்கள்.

**டிரைவர்**
நான் வந்து சொல்லவா? நீங்க போய்க்குவீங்களா?

**மணி**
நாங்க பாத்துக்குறோங்க! தேங்க்ஸ்! ரொம்ப தேங்க்ஸ்ங்க!

வண்டி கிளம்புகிறது.

SCENE 59.

*மருத்துவமனையில் பின்புலத்தில் செழியனின் அம்மா பேயறைந்தாற் போல் உட்கார்ந்திருக்க, உதயன் டிபன் கவரைத் தருகிறான்.*

**உதயன்**
எல்லாம் சரியாயிடும். சாப்பிடு! ...

பதிலேதும் பேசவில்லை செழியனின் அம்மா ...

**உதயன்**
ஆட்டோவுல உக்காந்துக்குறீயா ...
டேய்! கூட்டிட்டுப் போடா!

கூட இருந்தவன், செழியனின் அம்மாவை தாங்கியபடி பேசுகிறான்.

**கூட இருந்தவன்**
வாக்கா! நீயே இப்பிடி உக்காந்தா
எப்பிடி ...!

தம்பிக்கு ஒண்ணும் ஆவாதுக்கா ...
(Indistinct voice)

அவர்கள் பின்புலத்தில் நடந்து செல்ல, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த உதயனை வேறோரு குரல் அழைத்தது.

**HEAD NURSE**
செழியன் ...!
(அருகில் நடந்தபடி)
நீங்க தானே ... இது details!
Surgeryக்கு Counterல்ல Pay
பண்ணிடுங்க! இதெல்லாம் மருந்து!
கீழ medical shop இருக்கு! Night ஏ
வாங்கி கொடுத்துடுங்க! ஏன்னா
Morningல tension வேண்டாம்!

கையில் வாங்கிய Prescription பேப்பர்களைப் பார்த்துக் கொண்டிருந்த உதயனிடம் இருந்து மற்றொரு கை அதை வாங்கியது. அது பிரின்சிபல்லுடையது.

**PRINCIPAL**
நாங்க கட்டிர்றோம் Madam!

உதயன் பிரின்சிபல்லை பார்க்கிறான்.

**PRINCIPAL (V.O)**
டாக்டர் கிளம்பிட்டாரா?

**HEAD NURSE**
ஆமா! morning 6.30க்கெல்லாம்
வந்துடுவாரு.

SCENE 60.

*முழு இருட்டு. ஒரு ஹைவேயில் எப்போதோ செல்லும் வாகனங்களின் ஒளி அளவிற்கு ஏற்றாற் போல் மெர்லினின் முகமும் மணிகண்டனின் முகமும் முழுவதும் அரைகுறையாய் தெரிகின்றன.*

INTERCUT

1. ஏதோ வித்தையை பார்க்குமளவிற்கு ஒரு கூட்டம் வந்து உட்காருகிறது.

2. ஒரு பெண் புடவையைக் கட்டிக் கொண்டிருக்க, மற்றொருவன் பின்னே வந்து கட்டிக் கொள்கிறான்.

3. மற்றொருவன் கண்ணாடியைப் பார்த்து முகத்திற்கு மேக்கப் போட்டுக் கொண்டிருப்பான்.

மெர்லினும் மணிகண்டனும் லாட்ஜிற்கு வரும் வழியில் யாரோ ஒருவன் ஒண்ணுக்கு போய்க் கொண்டிருப்பான். மெர்லினும் மணிகண்டனும் லாட்ஜிற்கு வந்தடைவார்கள்.

SCENE 61.

*லாட்ஜில் குட்டி டிவியில் இசையருவியில் ஏதோ ஓடிக் கொண்டிருக்க, ஒருவன் லுங்கி மேலேற தூங்கிக் கொண்டிருந்தான்.*

*எதிர்பாராத மெர்லின் திரும்பிக் கொள்ள, மணிகண்டன் அவனை எழுப்பினான்.*

**மணிகண்டன்**
சார்! சார்!

திடுக்கிட்டு எழுந்தவன் நோட்டை மணியின் பக்கம் திருப்புகிறான். சற்று தள்ளி நிற்கும் மெர்லினை மேலிருந்து கீழ்வரை நோட்டம் விடுகிறான். மணிகண்டன் எழுதிக் கொண்டிருக்கிறான். சட்டென்று மணிகண்டன் கவனிப்பதாய் தெரிய பார்வையை திருப்பி கொண்டு சொன்னாள்

**பையன்**
ஆயிரம் ரூபா!

**மணிகண்டன்**
ஆயிரம் ரூபாயா?

**பையன்**
அட்வான்ஸ் தான் சார்! போவும்போது நானூறு வாங்கிக்கங்க ...! சாவியை மேசையில் போட்டான்.

வாயில் விரலை விட்டு ஆழ் ஈறில் ஒட்டிக் கொண்டிருந்த எதையோ எடுத்து மீண்டும் அதை முன்னம் பற்களில் வழித்து சுவைத்துக் கொண்டே சொன்னான்.

**பையன்**
முதல் floor, ரெண்டாவது ரூமு

SCENE 62.

*பெண் போலீஸ் தலையைத் துவட்டியபடி chordless போனை எடுக்கிறார்கள். பின்னணியில் TVயில் கார்டூன் ஓடிக் கொண்டிருக்கிறது.*

**பெண் போலீஸ்**
ஹலோ! ம்! ம்! சொல்லுங்க ...

INTERCUT

மணி லாட்ஜில் உள்ள போனில்,

**மணிகண்டன்**
மேடம் இங்க பஸ் இப்போ இல்லயாம்!
காலைல 2.30க்கு பஸ்! அதை பிடிச்சு
வந்துடுவோம் mam!

**பெண் போலீஸ்**
ஏன்? Taxi எதுவும் இல்லயா? ம்

ம்ம்! alright! எங்க இருக்கீங்க ...

ம்! ம்! சரி! சென்னைக்கு Reach
பண்ணதும் எனக்கு call பண்ணுங்க
...

ம்!

ம்!

போனை கட் செய்துவிட்டு, மீண்டும் டயல் பண்ணுகிறார் பெண் போலீஸ்

**பெண் போலீஸ்**
ஆரணி இன்ஸ்பெக்டர் line
குடுங்க...

உட்கார்ந்து கொண்டு கால்மேல் கால் போட்டபடி முன்னே பிளேட்டில் வைக்கப்பட்டிருக்கும் பிளேட்டை கையில் எடுத்து மேகி நூடுல்ஸை ஒரு Spoon வாயில் வைத்து மெல்லுகிறார்.

SCENE 63.

**மணிகண்டன்**
சாப்பிட எதாவது கிடைக்குமா?

**பையன்**
பரோட்டா தான் இருக்கும்! வாங்கினு
வரட்டா?

கையை நீட்டுகிறான் பையன்.

**மெர்லின்**
எனக்கு எதுவும் வேணாம்!

**மணிகண்டன்**
இரண்டு செட்டு பரோட்டா
வாங்கிக்கோங்க!

காசைத் தருகிறான்.

பையன் வெளியே போகிறான். இருவரும் மேலே போக, சுவரெல்லாம் பான்பராக் கறைபடிந்திருக்க, உடைந்த plastic குப்பைத் தொட்டியில் சிகரெட் அட்டைகளும், பீர் பாட்டில்களும், ரம் பாட்டில்களும் இருக்கிறது. மெர்லினுக்கு குமட்டுகிறது.

ஏற ஏற சிலர் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்க அவர்கள் வழியில் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள்.

அவர்களைத் தாண்டிப் போக வேண்டிய சூழலில் மணிகண்டன் சற்று ஒதுங்கிக் கொள்ள போதையில் இருந்த யாரும் கவனிக்கவில்லை! ஒருவன் மட்டும் சட்டென்று கவனித்துவிட எல்லோரும் மெர்லினையும் மணிகண்டனையும் பார்த்து அமைதியாக, ஒருவன் ஒதுங்குகிறான். மெர்லினும் மணிகண்டனும் நடந்து விடுகிறார்கள். உள்ளே சென்று மணி பூட்டைத் திறந்து கொண்டிருக்கும்போது, பின்னால் ஒரு குரல்;

**பின்குரல்**

ஒத்தா நமக்கு மட்டும் இல்லேனிட்டான் மாமா! இவனுங்க கூட்டுனு வராணுங்க பாரு!

**பின் குரல்**

வுடு மாமா! நான் கேக்குறேன் உனக்கு!

ஓடியே வந்த மணிகண்டன் வெறி கொண்ட மட்டும் தாக்குகிறான். மெர்லின் தடுத்து பிடிக்க, அங்கிருந்து மற்ற இருவர்களும் திமிர எட்டி மிதிக்கிறான். இருவரில் ஒருவன் சமாதான முயற்சியில், இறங்குகிறான்.

1

வுடுனா! வுடுனா! போதைனா! வுடுனா!

2

ஏய்! உள்ளபோ! உள்ளபோ!

மெர்லின் மணிகண்டனை இழுத்தபடி உள்ளே செல்ல உள்ளிருந்து கதவைத் தாழிடுகிறார்கள்.

**பின் குரலில்**

ஏய்! வூட்டுக்காரிய கூட்டுடு வந்துகிறான். தப்பு நம்ம மேலடா!

SCENE 64.

*ஆட்டோவில் இருட்டாக இருக்க முன் சீட்டில் மட்டும் கொஞ்சம் வெளிச்சம் தெரிகிறது. அங்கு யாருமில்லை. ஒரு Scooty மட்டும் ஆட்டோவைத் தாண்டிப் போய் நிறுத்திக் கொண்டிருக்க, உதயனிடம் இருந்த பையன்,*

**பையன்**

நீ சாப்பிட்டுடு இருக்கா! தோ வந்துர்றேன்! என்று சொல்லிவிட்டு கிளம்பி விடுகிறான்.

முன்பு coffee shopல் இருந்த அதே இளம் பெண் நிருபர் ஒரு நோட்டோடும் பேனாவோடும் Recorderரோடும் வர, ஆட்டோவினுள் பார்த்தாள்.

**இளம் பெண்**

ம்மா... என் பேரு ரம்யா! Today Tamil Nadu பத்திரிக்கையில இருந்து வரேன்! உள்ள வரலாமா?

பதில் வராததால் உள்ளே அவரும் இருட்டில் மூழ்குகிறாள்.

**இளம் பெண்**

நீங்க சொல்லப் போறதுதான்
நாளைக்கு ஹெட்டைன்ஸ். உங்க
குடும்பத்தைப் பத்தி சொல்லுங்க!
உங்களுக்கு மொத்தம் எத்தனை
பிள்ளைங்க? இதுக்கு முன்னாடி இந்த
ஸ்கூல்ல இது மாதிரி ஆகியிருக்கா?
Fees தரலை வைக்கலைன்னு
பிரச்சினை பண்ணியிருக்காங்களா?

அந்த Teacher எப்படி? உங்களுக்கும் அவங்களுக்கும் இதுக்கு முன்னாடி ... உங்க பையனுக்கு ... Suppose... எதாவது ...

**செழியனின் அம்மா குரல்**
(கூச்சலிடுகிறாள்)
போ! போ!

Tiffin Cover வெளியே எறியப்பட, சாம்பார் பாக்கெட் வெளியே வந்து விழ, பேச்சு மூச்சு இல்லாமல் ரம்யா இறங்கியபடி உற்று பார்த்துக் கொண்டே செல்கிறாள்.

SCENE 65.

*லாட்ஜ் ரூமின் பாத்ரூமில் இருந்து வெளியே வந்த மணிகண்டன் மெர்லினைப் பார்க்கிறான். அவள் தனக்குத்தானே முணுமுணுத்தபடி எதையோ செய்து கொண்டிருக்கிறாள். அவன் வந்ததைக் கூட அவள் கவனிக்கவில்லை. முன்புலத்தில் "All out'' எரிந்து கொண்டிருந்தது. நிழலோடு ஏதோ பேச, மணிகண்டன் அவளை அழைத்தான்.*

**மணிகண்டன்**
மெர்லின்! மெர்லின்! எதையும்
கவனிக்காமல் இருந்தவள்,
விறுவிறுவென அவனருகில் அவன்
போனதும் கவனித்துவிட்டு

**மெர்லின்**
ம்!

**மணிகண்டன்**
என்ன ஆச்சு? ம்! டிவியை வாது போட
வேண்டியதானே?

என்று ரிமொட்டை எடுக்க, கதவு தட்டப்படுகிறது. திறந்தால் பையன் ஒரு கவரை நீட்டுகிறான், மீதி சில்லறையோடு, மணி வாங்கிக் கொண்டு கதவை மூட, மெர்லின் எல்லா சேனலையும் மாற்றி மாற்றி பார்க்கிறாள். இடையில் செழியனின் போட்டோ வந்துவிட, அதிர்ச்சியாய் பார்க்கிறாள்.

டீவியில் ஆறுபடை வீடு பேசுகிறார்

**ஆறுபடை வீடு**
இச்சிறுவன் இன்று
வன்முறைக்குள்ளாகிறான் என்றால்
அது இன்றைய குழந்தைகளுக்கு எந்த
அளவுக்குப் பாதுகாப்பின்மை
இருக்கிறது என்பதன் அடையாளம்.
ஊரார் குழந்தைகளை அடிப்பதற்கு
இவர்கள் யார்? எவ்வளவு பெரிய
குற்றத்திற்கும் உயிரைப் பறிப்பது
என்பது தண்டனையாகுமா?

**RAICHEL SINGH**

No! This kind of an act will actually end up with a serious law to punish the teachers, school management and the other responsible stake holders! As using the children not only affects the health but also the mental well being of the kid..

**ஆறுபடை வீடு**

அதிலும், இந்த பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம், பாலுணர்வு சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தையும் ஆசிரியர்களுக்கு கையாளத் தெரிவதில்லை.

**AJIT**

Thank you very much Mr. Arupudai & Raichel. Now lets listen to what the class mates of cheziyan have to say about this?

அங்கயற்கன்னி பக்கவாக dress செய்யப்பட்டு lipstick போட்டுக்கொண்டு

**அங்கயற்கன்னி**

செழியன், நிகிலாகிட்ட உம்மா கேட்டான்னு நான் தான் Miss கிட்ட சொன்னேன் uncle! அப்போ, செழியனை கூப்பிட்டு மிஸ் நல்லா அடிச்சுட்டாங்க uncle! அவன் கீழ விழுந்துட்டான் uncle!

அதற்கு மேலும் எல்லாருடைய முகங்களும் வர வர மெர்லின் tiffin கவரை தன்னுடைய விரலால் அழுத்தி அழுத்தி கிழித்தாள். சட்டென்று மணிகண்டன் சேனலை மாற்ற, இசையருவியில் “கண்ணே! கலைமானே! பாடல் ஓடிக் கொண்டிருந்தது.

**மணிகண்டன்**

இங்க பாரு! ஒன்னும் பயப்படாதே! நாளைக்கு காலையில எல்லாம் சரியாயிடும்! இந்த mediaக்கு வேற வேலையில்ல...! சாப்பிடு!

என்று, திரும்பி கண்ணாடியைப் பார்த்து தலை சீவினான். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு திரும்பிப் பார்த்தால் அங்கு மெர்லின் இல்லாமல் போக சற்று தள்ளி, அவள் அவசர அவசரமாய் All-outஐ திருக ஆரம்பிக்க, மணி ஓடி வந்து அதைத் தட்டி விடுகிறான்.

**மணிகண்டன்**

ஏய்! மெர்லின்! என்ன பண்ற?

ஒரு அறை விடுகிறான். தலை குனிந்த மெர்லின், சீலிங்கை நோக்கி கத்தி, கதற ஆரம்பிக்க, மணிகண்டன் அவளை அப்படியே அணைத்துக் கொள்கிறான்.

SCENE 66.

*முதல் காட்சியில் பார்த்த அனைவரும் தெருக்கூத்தில் ஓய்யாரமாக வர,*

**கட்டியங்காரன்**

குற்றவுணர்ச்சியாகியது குத்திக் குத்தி
கொஞ்சம் கொஞ்சமாய் வதம் செய்ய,
மன சாட்சியானது மரத்தின் மேல்
ஏறிக் கொண்டு பெரும் பேயைப் போல
பயங்காட்ட, தவித்தனள்; துடித்தனள்;
கதறினள்; குந்திதேவி!

மேளங்கள் முழங்குகின்றன

**கட்டியங்காரன்**

தெரியாமல் அண்ணனை குகையில்
அடைத்து விட்ட சுக்ரீவனைப் போல,

வண்ணான் சொன்னான் என்று
மனைவியை காட்டுக்கு அனுப்பிய
ராமனைப் போல,

தந்த வரத்தைக் காப்பாற்ற தன்
மகனை காட்டுக்கு அனுப்பிய
தசரதனைப் போல

அண்ணன் சொல்லியும் அண்ணியை
தனியே விட்டு இராவணன் தூக்கிச்
செல்ல காரணமான இலக்குவனைப்
போல,

தவித்தனள்; துடித்தனள்; கதறினள்
குந்திதேவி

மேளங்கள் முழங்குகின்றன.

Montages

1. போலீஸ் ஏட்டு ஒருவர் இந்த தெருக்கூத்து நடக்க நடக்க எல்லாப் பக்கமும் தேடுகிறார்; லாட்ஜில் கடையில் போய் கேட்க, பையன் மாடியை காட்ட, அவர் படிகளேறி மெர்லினும் மணிகண்டனும் இருந்த ரூமைத் தட்ட, அது தானாய் திறக்கிறது. உள்ளே யாரும் இல்லை.

2. ஒரு பஸ்சில் உட்கார்ந்து கொண்டு மணியும் மெர்லினும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

3. மெர்லினின் தாய் இயேசுவின் சிலைக்கு முன் மண்டியிட்டு பிரார்த்தனை செய்கிறார்.

4. செழியனின் முகத்தில் ஆக்ஸிஜன் மாஸ்க் போடப் பட்டிருக்கிறது.

5. உட்கார்ந்த இடத்தில் கண்ணயர்ந்த Principal ஐ கண்ணன் வீட்டுக்குப் போகச் சொல்ல, வேண்டாம் என்ற சைகையோடு உட்கார்ந்து கொள்கிறார்.

6. உதயன் ஏதோவொரு டீக்கடையில் சிகரெட் பிடித்தபடி புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான்.

7. பேப்பர்கள் அச்சிடப்பட்டு கொண்டிருக்கின்றன.

8. ஆளில்லாத இருட்டு ஆட்டோவில் செழியனின் அம்மாவின் கை மட்டும் வெளியே தெரிகிறது.

9. மெர்லினுக்கு அருகில் இருக்கும் ஜன்னல் கண்ணாடியை மணி மூடுகிறான்.

10. மெர்லினுக்கு 5'B' வகுப்பில் நுழைந்த காட்சி நினைவுக்கு வருகிறது.

11. செழியனிடம் பேசிய காட்சி நினைவுக்கு வருகிறது.

12. செழியனை அடித்த காட்சி நினைவுக்கு வருகிறது.

13. மூடிய ஜன்னல் கண்ணாடியை மெர்லின் கஷ்டப்பட்டு திறக்கிறாள். ஏன்? என்று மணி கேட்டபடி அவளுக்கு உதவி செய்கிறான்.

SCENE 67.

*காலை விடிந்து விட அரை தூக்கமாய்க் கிடந்த மணி அருகில் பார்த்தால் மெர்லின் இல்லை! சட்டென்று எழுந்து விட, கண்டெக்டரிடம் கேட்க,*

**மணிகண்டன்**
சார் என் Wife பாத்தீங்களா?

**கண்டக்டர்**
இப்பதானப்பா தாம்பரத்துல எறங்குச்சு
ஒரு லேடி!

விசிலடிக்க வண்டி குரோம்பேட்டை அருகில் ஓரங்கட்ட, குதித்து இறங்குகிறான் மணி.

எதிரில் ரோட்டை அவசரஅவசரமாய் கடக்க, வரும் போகும் அனைத்து வண்டிகளுக்கும் கைகாட்ட, யாரும் நிற்காமல் போகவே, ஓடுகிறான். அழுதுகொண்டே ஓடுகிறான் மணிகண்டன்.

தூரத்தில் வரும் ஒரு பால் வண்டிக்காரரை கணக்கு பண்ணி கைகாட்ட அவர் நிறுத்த அதில் ஏறிக் கொள்கிறான்.

SCENE 68.

*தாம்பரம் ரயிலடியில் இறங்கி மார்க்கெட்டில் தேடுகிறான். பஸ் ஸ்டாண்டில் தேடுகிறான். ரயிலடிக்கு வந்து தண்டவாளங்களில் தேட, பிறகு மேலுள்ள footbridge ல் நிற்பதைப் பார்த்து விடுகிறான்.*

*மேலேறி அவள் நின்று கொண்டு ரயில்களை வெறிப்பதைப் பார்க்கிறான். ஏங்கி ஏங்கி அழுதவனாய் அவளிடம் நடந்து வருகிறான்.*

**மெர்லின்**
அந்தப் பையனோட அம்மாவை
பாக்கணும்.

மிகவும் மெல்லியக் குரலில் சொன்னதால் மணிக்கு கேட்கவில்லை

**மணிகண்டன்**

ம்!

**மெர்லின்**
அந்தப் பையனோட அம்மாவ
பாக்கணும்!

ஒரு ரயில் பின்னணியில் கடக்க, announcement குரல் கேட்கிறது.

**ANNOUNCEMENT** (V.O)
பிளாட்பாரம் ஒன்றிலிருந்து செல்லும்
மின்தொடர் வண்டி பணிமனைக்குச்
செல்கிறது. The train from the
platform no. 1 will head on to the
shed.

மணி பதிலேதும் பேசாமல் அவளைப் பார்க்கிறான்.

SCENE 68. MONTAGES

1. ஒரு பெரிய வீட்டின் வாசலில் ஒரு கார் வெளியே போக அதன் பக்கத்து தூணில், \`"Dr.. ராஜேந்திரவர்மன் - Neurosurgeon" என்று பொறிக்கப்பட்டிருக்கிறது.

2. ஒரு ஆஞ்சநேயர் கோவிலில் வடைமாலை - வெண்ணையோடு ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையில் தூக்கியபடி நிற்க, உருகி வேண்டிக் கொண்டிருக்கிறார், ராதா தணிகாச்சலம்.

3. எலக்ட்ரிக் trainÀ ல் மெர்லினும் மணிகண்டனும் பயணித்துக் கொண்டிருக்க, அவர்களின் கைகள் பிணைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

4. சிங்கும், மற்றும் இரண்டு இளைஞர்களும், கைகளை மடித்தபடி வெளியே வர அது Blood Bank.

5. ஒரு வழக்கறிஞர் White & White போட்டுக் கொண்டு coffee சாப்பிட்டுக் கொண்டே, மீசை மானேஜரோடு ஒரு பால்கனியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

6. பள்ளிக் குழந்தைகள் சாலையைக் கடக்க தயார் நிலையில் இருக்க, ஒரு ஆட்டோவில் மணிகண்டனும் மெர்லினும் கடக்கிறார்கள்.

7. அங்கயற்கன்னி uniform அணிந்துக் கொண்டே தன் தாயிடம் கேட்கிறாள்,

அங்கயற்கன்னி
ம்மா! செழியன் இன்னிக்கு ஸ்கூலுக்கு
வருவானாம்மா?

SCENE 69.

*Dr. தன்பத் ஜெயினும், வேறொரு முதிய டாக்டரும் ராணுவ தளபதிகளைப் போல் நடந்து வருகிறார்கள். பத்மாவதியும், ராதாவும் எழுந்து கொள்கிறார்கள். Principal ஏற்கனவே நின்றிருக்கிறார். உதயன் செல்பவர்களை வெறித்தபடி இருக்கிறான். கண்ணன் வேறொரு சட்டையோடு நின்றிருக்க, அருகில் ஐஸ்வர்யாவும் கண் கலங்கியபடி நிற்கிறாள்.*

*இறுதியில் அந்த பெஞ்சில் ஜெனிஃபரின் அம்மா, செழியனின்*

*அம்மாவுக்கு அருகில் உட்கார்ந்து இருக்கிறார்கள்.*

*பைபிள் கையோடு ஜெனிபர் எழ முயற்சிக்க எந்த சலனமும் இல்லாமல் செழியனின் அம்மா தரையை பார்த்தபடி அமர்ந்திருக்கிறார். அங்குள்ள சுவரின் கடிகாரம் ஒன்றில், மணி 7.30 மணிக்கு சில நிமிடங்கள் முந்திக் கிடக்க மெர்லினும் மணிகண்டனும் நுழைகிறார்கள். அனைவரின் பார்வையும் இருவர் மீதும் பட, மெர்லின் பிணமாய் நடந்து வந்தாள். உதயன் இருவரையும் பார்த்துவிட்டு அவர்களை நோக்கி வேகமாக நடக்க, மணிகண்டன் தாக்க வருவதாய் எண்ணி உதயனின் தோள்களைப் பிடிக்க, மணியின் சட்டையைப் பிடிக்கிறான் உதயன். சிங்கும், கண்ணனும் பிரித்து விட முயற்சிக்க, இதெல்லாம் பின்புலத்தில் நிகழ எதையும் கண்டுகொள்ளாமல் ஏங்கிய வண்ணமாய் நகர்ந்து வந்தாள் மெர்லின். தன் தாய், ஜெனிஃபர் அருகில் இருந்ததும் கூட அறியாதவளாய், செழியனின் தாய் முன் மண்டியிட்டு கதற ஆரம்பிக்கிறாள். அவரது கையை எடுத்து தன் கன்னத்தில் அறையச் சொல்லி அடித்துக் கொள்ள, மெர்லினை அப்படியே ஆரத் தழுவிக் கொள்கிறாள் செழியனின் அம்மா.*

**செழியனின் அம்மா**

என் பையன் பொழைக்கணும்!
அவ்வளவு தான்! கண்டிப்பா
பொழைச்சுடுவான்!

அணைத்தவள் கைகளை விலக்க, அப்படியே சரிகிறாள் மெர்லின். எல்லோரும் அலறிக் கொண்டு ஓடி வருகிறார்கள்.

**மணிகண்டன்**

(குத்து வாங்கிய கையோடு)
மெர்லின்! மெர்லின்

கீழே விழ hand bagஐ தவறவிட்டு அப்படியே கிடந்த மெர்லினை அனைவரும் தூக்க முற்பட யாரோ hand bag தவறி கீழே விழுகிறது. அதிலிருந்து 'All-out' ஒன்று உருண்டு Bench அடியில் உருள்கிறது. அதை யாரும் கவனிக்கவில்லை. மெர்லினை தூக்கி சென்றவுடன் ஏதோ ஒரு கை, வந்து handbagஐ எடுத்து செல்கிறது.

பதறியவளாய் பார்த்து நின்ற செழியனின் அம்மாவுக்கு சற்று தள்ளி உதயன் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். பின்புலத்தில் மெர்லின் தூக்கி செல்லப்பட முன்புலத்தில் ஆபரேஷன் தியேட்டர் உள்ளே செழியன் Strecherல் கொண்டுவரப்பட Operation தியேட்டர் மூடி இருள் படர்கிறது.

END